Price Rs. 20.00
விலை ரூ: 20.00
PUBLIC
SPECIAL COLLECTION


ISSN 1391-9504

# Vijey விஜய்

# விஜய்

23.04.2008 - மலர் 05, இதழ் 07


இவ்வார
இலவச லூடோ






ஷேக்ஸ்பியர்
நினைவு தினம்

## பனிக்காலத்து வாழ்க்கை முறை



ஆய்வுப் பணியில்
'கெசினி'




விலை
ரூபா 12/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைநிலம் தார்



முல்லை, மருதம், நெய்தல், பாலை, குறிஞ்சி ஆகிய ஐவகை நிலங்களில் இந்தப் பாலைநிலத்தை நாம் எமது நாட்டில் காணமுடியாது. ஆனால், பாலைவனத்து பசுஞ்சோலையாகிய (OASIS) ஓயசிஸ் பற்றியும், பாலைவன வாகனமான ஒட்டகம் பற்றியும்,



மணல் பாங்கான பாலைவனத் தரையைப் பற்றியும், அங்கு அள்ளி வீசும் காற்றைப் பற்றியும், பாலைவனத்து தாவரமான பேரீச்சை பற்றியும் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறோம். அவற்றைப் பார்த்து அனுபவிக்க வேண்டுமென்றால் எமக்கு அருகில் இருப்பதோ இந்தியாவின் தார் பாலைவனம்தான்.

இத்தார் பாலைவன்த்தை 'மகா இந்தியாவின் பாலைவனம்' என்றும் அழைப்பர். மேற்கு இந்தியாவினதும் தென் கிழக்குப் பாகிஸ்தானினதும் எல்லையிலேயே தார் பாலைவனம் அமைந்துள்ளது. 'தார்' பாலைவனத்தின் பெரும்பகுதி இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தினுள்ளேயே அமைந்துள்ளது. வடக்கே குஜராத் மற்றும் தெற்கில் ஹரியான மற்றும் பஞ்சாப் மாநிலம் வரையும் பரந்து செல்கின்றது. பாகிஸ்தானில் அது சிந்து மற்றும் பாகிஸ்தானிய பஞ்சாப் மாகாணங்களில் பரந்து விரிந்து செல்கிறது.

4,46,000 சதுர கி.மீற்றர் பரப்பளவைக் கொண்ட தார் பாலைவனம் 805 கி.மீற்றர் நீளமும் 485 கி.மீற்றர் அகலமும் கொண்டது. இதில் 2,08,110 சதுர கி.மீற்றர் பிரதேசம் இந்தியாவின் எல்லையினுள் அமைந்துள்ளது. அதிலும் 60% மான பிரதேசம் இந்திய மாநிலமான ராஜஸ்தானில் அமைந்துள்ளது.

தார் பாலைவனத்திற்கு அருகில் வாழும் மக்களின் பிரதான ஜீவனோபாயத் தொழிலாகத் திகழ்வது விவசாயமும் விலங்கு வேளாண்மையுமாகும். மழைவீழ்ச்சி மிகக் குறைவாக இருப்பதால் இங்கு நீர் பற்றாக்குறை நிலவுகிறது.

**J.A. விபாகர்**

# செம்மொழியாம் தமிழ்மொழி

உலகின் ஆறு மொழிகள் பழம் பெருமை வாய்ந்த செம் மொழிகளாக உள்ளன. தமிழ், சமஸ்கிருதம், சீனம், இலத்தீன், ஹீப்ரு, கிரேக்கம் ஆகிய மொழிகளே அவை. செம் மொழிக்கான தகுதிகள்:-

01. மொழியின் தொன்மை (2000 ஆண்டுகளுக்கு முன்னரே இலக்கிய இலக்கணம் கண்ட தொன்மை)
02. தனித்தன்மை
03. அனைவரும் ஏற்கும் பொதுப்பண்பு
04. நடுநிலைமை
05. உயர் சிந்தனை
06. மொழிக்கோட்பாடு
07. தாய்த்தன்மை (பல மொழிகளுக்குத் தாயாக இருக்கக்கூடிய தகுதி)
08. பண்பாடு, கலை, கலாசார வெளிப்பாடு
09. இலக்கிய வளம்
10. பிறமொழித்தாக்கமில்லாத தனித்தன்மை
11. கலை இலக்கியத் தனித்தன்மை.

இதில் முக்கிய அம்சம் என்னவென்றால் தமிழ்மொழி இந்த 11 தகுதிகளுக்கும் முற்றிலும் பொருந்திய உலகின் தனிச் செம்மொழியாக உள்ளது. வெறும் 7 தகுதிகளே உள்ள, பேச்சு வழக்கு ஒழிந்த சமஸ்கிருதத்தை எப்போதோ செம்மொழியாக்கினார்கள்.




எனினும், காலம் கடந்தாவது மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையால் உலகப் பல்கலைக் கழகங்களில் தமிழ் இடம் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழ் மொழி வளர்ச்சிக்கு பெருந் தொகை நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**J.A. விபாகர்**

# உயிரைப் பணயம் வைக்கும் பந்தயம்

அந்த ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொள்பவர்களுக்கு பரிசாக ஒரு 'டீ-சேர்ட்' கூட வழங்கப்படாது. ஆனால், உயிரைப் பணயம் வைக்கும் அந்தப் பந்தயத்தில் பல்லாயிரம் பேர், 8 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை கட்டிப் பங்கேற்கின்றனர் என்றால் நம்பமுடிகிறதா?

இங்கிலாந்து நாட்டில் நடைபெறும் 'கடினமான வீரர்' என்ற ஓட்டப்பந்தயம்தான் அது.

ஆதரவற்ற, உதவி தேவைப்படும் குழந்தைகளுக்காக பில்லி வில்சன் என்பவரால் 1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும் இந்த ஓட்டப்பந்தயம்.

'வால்வர்ஹாம்டன்' என்ற இடத்தில் உள்ள 150 ஏக்கர் பண்ணை நிலத்தில், 'எலிகன்' என்று செல்லமாக அழைக்கப்பட்ட பில்லி வில்சனும், அவரது மனைவியும் இந்தப் போட்டியை நடத்தினர்.

ஜனவரி குளிர்காலத்தில் நடத்தப்படும் 'மிகக் கடினமான வீரருக்கான போட்டி', ஜூலை மாதம் நடத்தப்படும் 'சாதாரண வீரருக்கான போட்டி' என்று இருவிதமான பந்தயங்கள் உண்டு.

பந்தயத்தின் துவக்கமாக, 'பந்தயத்துக்கு தயராகும் ஓட்டமே' 9 கிலோமீற்றர் தூரத்துக்கு நீடிக்கும். இதில் முதலாவதாக, குன்றில் நடப்பட்ட குச்சிகளைத் தொட்டுக் கொண்டு மேலும் கீழுமாக ஓட வேண்டும். அடுத்து 'யானைக் கல்லறை' ஓட்டம். இதில், ஆங்காங்கே குதிரைச் சாணம் நிரப்பி வைக்கப்பட்டுள்ள 2 மீற்றர் உயர சிமெண்ட் தொட்டிகளுக்குள் குதித்து ஓடவேண்டும்.

அடுத்து 'குர்கா கிராண்ட் நெஷனல்' பந்தயத்தில், இடுப்பளவு





ஆழம் உள்ள, 'ஜில்'லென்ற சேறு நிரம்பிய எண்ணற்ற குழிகளுக்குள் குதித்து ஓட வேண்டும். ஆங்காங்கே பழைய கார் டயர்களும் போடப்பட்டிருக்கும்.

அடுத்து 9 மீற்றர் உயரக் கோபுரத்தில் போடப்பட்டுள்ள வலையைப் பற்றிக் கொண்டு ஏற வேண்டும். அவற்றின் இடையிடையே மின்சாரம் பாயும் வயர்களும் இருக்கும்!

இதையெல்லாம் தாண்டிச் சென்றால், 'கொல்லும் களம்' என்று இருக்கும். இப்பகுதியில் நீருக்குள் அமைக்கப்பட்ட சுரங்கப்பாதைகள், குறுகிய குழாய் வழியாக நீந்திச் செல்லவேண்டும்.

இப்போட்டியில் இதுவரை பலர் காயம் அடைந்திருக்கின்றனர். இவர்கள் 'ஹைப்போதெர்மியா' என்றஉடல் நிலை வெப்பக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர். பலர் ஓட்டத்தின் பாதியிலேயே விலகிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், இதுவரை யாரும் இறந்ததில்லை. உலகிலேயே மிகவும் கடினமான ஓட்டப்பந்தயம் என்றபோதும், தங்களின் உடல் பலத்தையும், மனபலத்தையும் நிரூபிப்பதற்காக ஆண்டுக்காண்டு ஆர்வத்துடன் இப்போட்டியில் பங்கேற்போரின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கில் அதிகரித்துவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ/தர கணித-விஞ்ஞானப் பிரிவில் சித்திபெற்ற மாணவர்களுக்கான

# ஜப்பானிய புலமைப்பரிசில் திட்டம்

க.பொ.த உ/தர கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்ற மாணவர்களுக்கு இளநிலைப் பட்டப்படிப்பு மற்றும் தொழில்நுட்ப கல்லூரி புலமைப்பரிசில் திட்டமொன்றை (மொன்புகாகாகுஷோ) உயர் கல்வி அமைச்சினூடாக வழங்க ஜப்பானிய அரசாங்கம் முன் வந்துள்ளது.

இப்புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிக்க விரும்பும் மேற்குறிப்பிட்ட தகைமைகளையுடைய மாணவர்கள், www.mohe.gov.lk எனும் இணையத்தள முகவரியினூடாக அல்லது 011-2693837/3 ஆகிய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்வதனூடாக இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று ஜப்பானிய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய தூதரகத்தினால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையில் பெறும் புள்ளிகளை அடிப்படையாக வைத்தே புலமைப்பரிசிலைப் பெறத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். போட்டிப் பரீட்சை இவ்வருடம் ஜூன் மாதமளவில் நடைபெறவுள்ளதோடு நேர்முகப்பரீட்சை ஜூலை மாதமளவில் நடாத்தப்படவுள்ளது. போட்டிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்களையும் மேலதிக விபரங்களையும்www.studyjapan.go.jp/en/toj/toj0308e.html#1 என்ற இணையத்தள முகவரியினூடாகப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்கள் இம்மாதம் 15, 16, 17 ஆம் திகதிகளில் வெளியான தினசரி பத்திரிகைகளில் பிரசுரமான விளம்பரங்களைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

விண்ணப்பங்களை நேரடியாகப் பெற விரும்புவோர் இல.18, வோர்ட் பிளேஸ், கொழும்பு-07 இல் அமைந்துள்ள, உயர்கல்வி அமைச்சுக்குச் சென்று விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இத்திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான முடிவு திகதி மே மாதம் 9 ஆம் திகதியாகும்.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
பெக்ஸ்: 2479688

## 2007 சா/தர பரீட்சையில்

# சகல பாடங்களிலும் சித்திபெறத் தவறியவர்களின் எண்ணிக்கை 12,354

2007, டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த சா/தர பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 12,354



வைப்பக படம்

பேர் எந்தவொரு பாடத்திலேனும் சித்தியடையவில்லையென பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சைக்குத் தோற்றிய மொத்த மாணவர்களின் தொகையில் 3.3 சதவீதமானோரே இந் நிலைக்கு ஆளாகியுள்ளனர். 2006 ஆம் ஆண்டில் இந்தத் தொகை 4.23 சதவீதமாக இருந்ததோடு இம்முறை ஓரளவுக்கு வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாகவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

எல்லாப் பாடங்களிலும் சித்தியடையாதவர்களில் 479 பேர் முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களாவர் என்பதோடு இரண்டாவது தடவையாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களும் மொத்த மாணவர் தொகையில் உள்ளடக்கப்பட்டுள்ளனரென்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, முதற் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றிய 2,76,516 பரீட்சார்த்திகளில் 4,832 பேர் 8 பாடங்களுக்கும் 'ஏ' சித்தியைப் பெற்றுள்ளனர் என்பதோடு மேற்படி க.பொ.த சா/தர பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் $3^{1/2}$ லட்சம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தினந்தோறும் உடற்பயிற்சி; பெண்பிள்ளைகளின் திறமை வளர்ச்சி







உடல், உள ரீதியான செயற்பாடுகளை சீராக வழிநடத்திச் செல்வதற்கு உடற்பயிற்சி துணைபுரிகின்றது. தினமும் உடற்பயிற்சியில் ஈடுபட்டால் எமது உடல் அவயவங்கள் சீராக இயங்கத் தொடங்குவதோடு உள ரீதியாகவும் நாம் புத்துணர்ச்சி பெறுகின்றோம்.

கண்மூடித்தனமாக எம்மை வருத்திச் செய்வதுதான் உடற்பயிற்சியல்ல. மாறாக, ஒரே இடத்தில் அமைதியாக நின்று உடலையும் உள்ளத்தையும் ஒரே சீராக வழிநடத்தக்கூடிய பயிற்சிகளில் ஈடுபடுவதே சிறந்த உடற்பயிற்சியாகுமென மருத்துவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்காவில் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள நோய்த் தடுப்பு அறிக்கையொன்றின்படி, பாடசாலை செல்லும் பெண் பிள்ளைகளை தினமும் உடற்பயிற்சியில் ஈடுபடுத்துவதன் ஊடாக அவர்கள் அடைந்து கொள்ளக்கூடிய நன்மையான தகவல்கள் பல வெளியாகியுள்ளன. ஆரம்பப் பிரிவிலிருந்து தரம் 5 வரையிலான வகுப்புகளில் கல்வி கற்கும் சுமார் 5000 மாணவிகள் இந்த பரிசோதனை நிகழ்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில், வாரமொன்றுக்கு சுமார் 70-300 நிமிடங்களுக்கு உடற்பயிற்சியில் ஈடுபடும் பெண் பிள்ளைகள் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுகின்றனர் என்பது தெளிவாகியுள்ளது. மேலும், பாடசாலை மட்டத்திலான செயற்பாடுகளில் மாத்திரமன்றி ஏனைய வெளிவாரிச் செயற்பாடுகளிலும் விருப்பத்தோடும் உற்சாகத்தோடும் பங்கேற்பதோடு அவர்களின் உடற்பலமும் அதிகரித்துக் காணப்படுமென இந்தப் பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



இந்தப் பரிசோதனையை ஆண் பிள்ளைகளுக்கிடையில் நடத்தி, அதனைப் பெண்பிள்ளைகளை வைத்து நடத்திய பரிசோதனையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, விஷேட மாற்றங்கள் எதனையும் அவதானிக்க முடியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. சாதாரணமாக ஆரம்பப் பிரிவுகளில் கற்கும் ஆண் பிள்ளைகள் சக மாணவிகளை விட உற்சாகமாகவே இருப்பார்கள் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். எனினும், ஆண்-பெண் பிள்ளைகள் வாரத்துக்கு ஒரு தடவை அல்லது இரண்டு தடவைகள் கட்டாயமாக உடற்பயிற்சியில் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்றும் அத்துடன், உடற்பயிற்சிகள் மட்டுப்படுத்தப்படுவதனால் பெண்பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் மற்றும் உள வளர்ச்சி குன்றக்கூடிய வாய்ப்புகள் அதிகம் எனவும் மருத்துவ ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

# பரீட்சை மோசடி தண்டனைக் காலம் 10 வருடங்களாக நீடிப்பு

பரீட்சை மோசடியில் ஈடுபடுபவர்களுக்கான தண்டனையாக பரீட்சை தடை விதிப்பு கால அளவு 5 வருடங்களிலிருந்து 10 வருடங்களாக நீடிப்பதற்கு பரீட்சைத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த உ/தர பரீட்சையிலிருந்து இந்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை மோசடிகளில் ஈடுபடும் பரீட்சார்த்திகளின் குற்றச்சாட்டுகள் நிருபணமாகும் பட்சத்தில் அவர்கள் இனிவரும் காலங்களில் பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் எந்தவொரு பரீட்சையிலும் தொடர்ந்து 10 வருடங்களுக்குத் தோற்றமுடியாமல் இருப்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விஜய் - ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் இணைந்து வழங்கும்
தாயக்கட்டையைக் கொண்டு விளையாடும் 'லூடோ'
வெவ்வேறு அட்டைகளை இந்த இதழுடனும் அடுத்துவரும் 30ஆம் திகதி இதழிலும் பெற்றுக் கொள்ளுங்கள்.

இன்றே உங்கள் பிரதியை பதிவு செய்து கொள்ளுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார்



**இன்று நாம் சிந்திக்கும் இந்த விடயத்தை 100 வருடங்களுக்கு முன்பே சிந்தித்த மேதை தான். வ.உ.சி. 'கப்பலோட்டிய தமிழன்', செக்கிழுத்த செம்மல்' என்றெல்லாம் போற்றப்பட்ட வ.உ.சிதம்பரம்பிள்ளைதான் அவர். நம் அயல் நாடான இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வீரர்களில் குறிப்பிடத்தக்கவர்தான் வ.உ.சிதம்பரம்பிள்ளை.**

ஒரு காலத்தில் அந்நியர் ஆட்சியின் கீழ் பெரும்பாலான ஆசிய, ஆபிரிக்க நாடுகள் அடிமைப்பட்டுக் கிடந்தன. 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கை உட்பட பல ஆசிய, ஆபிரிக்க நாடுகள் அந்நியரிடம் இருந்து சுதந்திரம் பெற்றன.

இன்று பொருளாதாரத்தில் பின் தங்கிய எமது நாடு உள்ளிட்ட பல நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தை,தொழில்துறை அபிவிருத்தியை, பொருளியல் விடுதலையைப் பற்றிச் சிந்தித்து அதற்கான திட்டங்களை வகுத்து வருகின்றன. இன்று நாம் சிந்திக்கும் இந்த விடயத்தை 100 வருடங்களுக்கு முன்பே சிந்தித்த மேதை தான் வ.உ.சி! 'கப்பலோட்டிய தமிழன்', செக்கிழுத்த செம்மல்' என்றெல்லாம் போற்றப்பட்ட வ.உ.சிதம்பரம்பிள்ளைதான் அவர். நம் அயல் நாடான இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வீரர்களில் குறிப்பிடத்தக்கவர்தான், வ.உ.சிதம்பரம்பிள்ளை. அக்காலத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் துணிச்சலுடன் போராடிய வீரர்தான் திலகர். அவருடன் மிக நெருங்கி நட்புக் கொண்டிருந்த வ.உ.சி திலகரின் வழிமுறைகளை ஆதரித்தார்.

வெள்ளையர்களுக்கெதிராகப் புரட்சிக் கொடி ஏந்திய வ.உ.சிதம்பரம்பிள்ளை இந்தியாவின் திருநெல்வேலி மாவட்டம் ஒட்டப்பிடாரம் எனும் ஊரில் 1872 செப்டெம்பர் 5 ஆம் நாள் பிறந்தார். தந்தையின் பெயர் உலகநாதம், தாய் பரமாயி அம்மாள். அவரின் கிராமத்திற்கு அருகிலுள்ள நகரமாகவும் துறைமுக நகராகவும் விளங்கிய தூத்துக்குடியில் உயர்நிலைக்கல்வி பயின்றார். தனது மக்களின் பல்வேறு நியாயங்களுக்கு நீதி கேட்கும் பொருட்டு சட்டம் படித்தார். ஈற்றில் வழக்கறிஞரானார். இருபத்தெட்டாம் வயதிலேயே அரசியலில் தீவிரமாய் ஈடுபட்டார். உள்நாட்டுத் தயாரிப்புகளையே வாங்குங்கள் என்று கூட்டங்களில் முழங்கி மக்களுக்கு நாட்டுப்பற்றை ஏற்படுத்துவார் வ.உ.சி.

அது 1906 ஆம் ஆண்டு. சுதேசிக் கப்பல் விடுவதை ஊக்குவித்து பேசிவந்த வ.உ.சி அதற்கெல்லாம் முன்னோடியாகத் தானே ஒரு கப்பல் நிறுவனம் தொடங்கி தூத்துக்குடித் துறைமுகத்திற்கும், கொழும்புத் துறைமுகத்திற்கும் இடையே கப்பல் ஒன்றை சேவையில் ஈடுபடுத்தினார். வர்த்தகம் செய்ய வந்து ஆட்சியைப் பிடித்த வெள்ளையர்கள் தங்களுடைய முறையைப் பயன்படுத்தியே உள்ளூர் மனிதர் நம்மை விரட்ட முனைகிறாரோ என அச்சம் கொண்டனர். நாளடைவில் அவர்களின் அச்சம் சினமாக மாறியது. நீண்ட காலமாகவே தமிழார்வம் உடையவராகத் திகழ்ந்ததால் இலக்கியப்




பணியில் முனைப்புடன் ஈடுபட்டார். திருக்குறள், தொல்காப்பியம் இவற்றுக்கு விளக்க உரை எழுதினார். அவரின் சுயசரிதை கவிதை வடிவம் பெற்றது. புரட்சிக்கவி பாரதியின் நட்பு தொடர்ந்தது. அது அவரின் இலக்கியப் பணிகளுக்கு உதவியது.

வாழ்க்கை முழுவதும் போராடியவர் வ.உ.சி விலைமதிக்க முடியாத சுதந்திரத்திற்காக தனது சொத்துக்களையும், பணத்தையும் இழந்தார். இறுதியில் நாட்டு வறுமையையும் வீட்டு வறுமையையும் எதிர்த்துப் போராட வேண்டி ஏற்பட்டது.

ஈற்றில் நோய்வாய்ப்பட்டு நோய்க்கெதிராகப் போராடினார். இறுதியாக 1936 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் நாள் காலமானார்.

வ.உ.சிதம்பரனாரின் அஞ்சாநெஞ்சமும், எத்தகைய இடையூறு ஏற்பட்டாலும் தொடர்ந்து போராடுகிற குணமும், இன்றைய இளைய சமுதாயத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**ப.இரஞ்சித் ஜெயகர்**

---

## விஜய் சந்தா விபரம்

'விஜய் பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ.624/= | ரூ.312/= |
| தபால் மூலம் | ரூ.1404/= | ரூ.702/= |

பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்
*(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)*

பெயர்: ..............................

முகவரி: ..............................

தொ.பே.இல: ..............................

எமக்கு .............. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.

.............................. ..............................
கையொப்பம் திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order), காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக்கட்டளையை மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**CIRCULATION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல - 0112479653

---

## வினா ஒன்று! விடைகள் பத்து



புகழ் பெற்ற அறிஞரான ஹஸ்ரத் அலி அவர்களைக் காண ஒருநாள் பத்து அறிஞர்கள் வந்தனர்.

அவர்களில் ஒருவர் அலியிடம் "நாங்கள் உங்களிடம் ஒரே ஒரு கேள்வி கேட்க உள்ளோம். எங்கள் பத்துப் பேருக்கும் தனித்தனியாக உங்களால் பதில் தர முடியுமா?" என்று கேட்டார்.

அதற்கு அலி "என்ன கேள்வி? தாராளமாகக் கேளுங்கள்" என்றார்.

"செல்வம்,அறிவு இரண்டிலும் எது சிறந்தது? ஏன்? என்பதுதான் எங்கள் கேள்வி" என்றார் அறிஞர்களுள் ஒருவர்.

முதலாமவரைப் பார்த்த அலி, "அறிவு-தீர்க்கதரிசிகள், ஞானிகள், மகான்கள் இவர்களின் பரம்பரைச் சொத்து. ஆனால், செல்வமோ கொடுங்கோலனின் ஆயுதம். ஆகவே, அறிவுதான் சிறந்தது" என்றார்.

இரண்டாமவரைப் பார்த்து, "உங்களிடம் செல்வம் இருந்தால் நீங்கள்தான் அதைக் காப்பாற்றவேண்டும்; ஆனால், அறிவோ உங்களை எப்போதும் காப்பாற்றும். ஆகவே, அறிவுதான் சிறந்தது" என்றார்.

அடுத்து மூன்றாமவரைப் பார்த்து, "செல்வந்தனுக்கு எப்போதும் விரோதிகள் அதிகம். ஆனால், அறிஞனுக்கு நண்பர்கள் அதிகம். ஆகவே, அறிவுதான் சிறந்தது"

நான்காமவரைப் பார்த்து, "செல்வம் பிறருக்கு கொடுக்கக் கொடுக்க குறைந்து கொண்டே போகும். ஆனால், கல்வியோ மாறாக அதிகரித்துக் கொண்டே போகும். ஆகவே, கல்விதான் சிறந்தது"

பிறகு ஐந்தாமவரைப் பார்த்து, "அறிவுள்ளவன் எப்போதும் தன் அறிவை வாரி வழங்கிக் கொண்டிருப்பான். அவனிடம் தாராளத் தன்மை இருக்கும். ஆனால், செல்வந்தனிடம் கஞ்சத்தனம் அதிகம் இருக்கும். ஆகவே, அறிவுதான் சிறந்தது"

அடுத்து ஆறாமவரைப் பார்த்து, "செல்வத்தை கள்வர்களால் திருடிக் கொண்டு போக முடியும். ஆனால், யாராலும் கவர முடியாதது அறிவு. ஆகவே, அறிவுதான் சிறந்தது"

ஏழாமவரைப் பார்த்து, செல்வம் கால ஓட்டத்தில் அழிந்துவிடும். ஆனால், அறிவை கால ஓட்டத்தால் எதுவும் செய்ய முடியாது. ஆகவே, அறிவுதான் சிறந்தது"

எட்டாமவரைப் பார்த்து, "செல்வத்திற்கு எப்போதும் எல்லையுண்டு; நிறையுண்டு; அளவுண்டு, கணக்குண்டு; ஆனால், அறிவுக்கோ அப்படிப்பட்ட எல்லைகள் எதுவுமில்லை. ஆகவே, அறிவுதான் சிறந்தது"

பிறகு ஒன்பதாமவரைப், பார்த்து "செல்வம் உள்ளத்தில் ஒளியைப் போக்கி இருளாக்கி விடுகின்றது. பரந்த மனப்பான்மையைக் குறுகச் செய்கிறது. ஆனால், அறிவோ இருண்ட உள்ளத்தில் ஒளியை பாய்ச்சி பரந்துபடச் செய்கிறது. ஆகவே, அறிவுதான் சிறந்தது"

கடைசியாக பத்தாமவரைப் பார்த்து "செல்வம் உள்ளச் செருக்கையும், ஆணவத்தையும் ஏற்படுத்துகிறது. ஆனால், அறிவோ இறைவனிடம் நாங்கள் உங்கள் அடிமைகள் என்ற பணிவையும் பண்பாட்டையும் வளர்த்து சகோதரத்துவ நல்வாழ்வையும் தருகிறது. ஆகவே, அறிவுதான் சிறந்தது' என்றார் அறிஞர் அலி.

"நன்றாய் சிந்தித்து, பிறர் சொல்வதைக் கேட்டு
கல்வியைச் சாலக்கற்று அறிவைப் பெற்றுக் கொள்ளுங்கள்
அறிவு வாழ்க்கைக்கு நல் வழிகாட்டும்"

தொகுப்பு: முஹம்மத் பயாஸ் சாஹர்,
அஜ்மிர் தேசிய பாடசாலை, உக்குவளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலதும் பத்தும்

✸ ரஷ்யாவின் விண்வெளி வீரர்கள் விண்வெளியில் எழுதுவதற்காகப் பென்சிலைப் பயன்படுத்திய அதேவேளை, 1960 இன் இறுதிப்பகுதியில் 'அப்பலோ' விண்வெளியோட்டத்தில் சென்ற விண்வெளி ஆய்வாளர்கள் சூன்ய புவியீர்ப்பு விசையில் எழுதும் ஆற்றலைக் கொண்ட பேனாவைப் பயன்படுத்தியதாக ஒரு தகவல் உண்டு.

இந்தப் பேனாவைத் தயாரிப்பதற்கு 'நாஸா' நிறுவனம் பல மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவு செய்ததாகப் பரவிய செய்தி வெறும் கட்டுக்கதையாகும்.

✸ விண்வெளிக்குச் செல்லும் விண்வெளி வீரர்கள், விண்வெளியில் வித்தியாசமாக இருப்பார்களா?

ஆம்! விண்வெளியில் இருக்கும்போது, விண்வெளி வீரர்கள் உயரமாகின்றார்கள். இது அதிசயம் என்பதோடு தெளிவான உண்மையுமாகும்.

✸ யுரேனஸ் கோளானது, ஜோர்ஜ் என்றே பெயரிடப்பட்டது. பிரித்தானியாவின் மூன்றாவது ஜோர்ஜ் அரசரின் ஞாபகார்த்தமாகவே இப்பெயர் வைக்கப்பட்டுள்ளது.


✸ கணிதத்தின் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டகோளொன்று எமது சூரியத்தொகுதியில் இருப்பதை நீங்கள் அறிவீர்களா? 'நெப்டியூன்'தான் எமது சூரியத் தொகுதியில் கணிதத்தின் மூலம் முதலாவதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கோளாகும்.

✸ விண்வெளிக்கு ஏகிய முதலாவது மனிதனுக்குப் பிறகு விண்வெளிக்குச் சென்ற முதலாவது உயிரினமாக ரஷ்யாவைச் சேர்ந்த 'லைக்கா' எனும் நாயே திகழ்கின்றது.

# செய்மதியின் உதவியால் உயிர் பிழைத்த ஐந்து கரடிகள்

காட்டில் எந்த உதவியுமில்லாமல் அநாதரவாகத் திரிந்த ஐந்து கரடிகளை ரஷ்ய செய்மதியின் உதவியால் இனங்கண்டு கொள்ள முடிந்துள்ளதோடு, குறித்த கரடிகள் மொஸ்கோவின் மிருகக்காட்சிசாலையின் விலங்கு வைத்தியர்களினால் இப்போது காப்பாற்றப்பட்டுள்ளன.

காப்பாற்றப்பட்ட இந்தக் கரடிகள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தேவையான கவனிப்புக்கள் அளிக்கப்பட்டன. அத்துடன் 'செய்மதி உணரிகள்' அந்தக் கரடிகளின் உடம்பில் பொருத்தப்பட்டதுடன், அவை காட்டுக்கு மீள விடுவிக்கப்பட்டு



தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் பொருத்தப்பட்டுள்ள செய்மதி உணரிகளின் மூலம் இக்கரடிகளின் வாழிடம், அசைவுகள் போன்றவற்றை தூர இடங்களில் இருந்து கணினியின் உதவியுடன் அவதானிக்க முடியும். இந்தச் செய்மதி உணரிகள் 90 நிமிடங்களுக்கு ஒரு முறை கரடிகள் தொடர்பான புதிய தகவல்களை தன்னியக்கமாகவே கணினிகளுக்கு தரக்கூடிய வல்லமை கொண்டுள்ளன.

இந்தப் புதிய தொழில்நுட்ப நிலைகளானது விலங்குகளின் நடத்தை தொடர்பாக அறிந்து கொள்வதற்கும் விலங்குகளைப் பாதுகாப்பதற்கும் உதவுமென ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை வெளியிடுகின்றனர்.

# பூமியில் 170 இற்கும் அதிகமான துளைகள்

பாரிய விண்கல்லொன்று பூமியுடன் மோதினால் என்னவாகும்? பூமி சுக்குநூறாகிவிடும் என்று நீங்கள் தெளிவாகப் பதில் சொல்லக்கூடும். மனிதன் பூமியில் தோன்ற முன்னர், பூமியுடன் விண்கற்கள் மோதியதால், பூமியின் மேற்பரப்பில் ஏற்பட்டுள்ள துளைகள் மற்றும் பள்ளத்தாக்குகளின் எண்ணிக்கைக்கு அளவேயில்லை.

இதுவரையில், உலகின் சகல கண்டங்கள் மற்றும் ஆழமான




கடல் பரப்புகளிலிருந்தும் 170 துளைகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மலைகளின் தோற்றம், எரிமலைகளின் வெடிப்பு, மண்ணரிப்பு என்பனவற்றின் காரணமாக பூமியின் மேற்பரப்பில் காணப்படும் துளைகள் மறைந்து செல்வதாக ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இவ்வாறு பூமியின் மேற்பரப்பில் காணப்படும் பல்வேறு வகையான துளைகள் அவற்றின் பருமனிலும் வடிவத்திலும் ஒன்றிலிருந்து ஒன்று வித்தியாசப்பட்டுக் காணப்படுகின்றன.




# விண்வெளிச் சுற்றுலாவுக்கு ரஷ்யா பச்சைக் கொடி

விண்வெளி ஆராய்ச்சிகளுக்கு இடையூறு விளைவிக்காத பட்சத்தில் விண்வெளிச் சுற்றுலாக்களை தாம் ஆதரிப்பதாக ரஷ்யாவின் விண்வெளி ஆராய்ச்சி முகவர் நிலையம் கருத்து வெளியிட்டுள்ளது.

ரஷ்யாவின் Soyuz விண்வெளி ஓடத்தில் விண்வெளிக்கு சுற்றுலா செல்வோரும் பயணிப்பதனால் அது சர்வதேச விண்வெளி ஆய்வு நிலையத்திற்கு எவ்விதத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆகவே, விண்வெளிக்கு சுற்றுலா செல்வதை நாம் ஆதரிக்கின்றோம் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



தற்போது, விண்வெளிக்கு சுற்றுலா செல்ல வேண்டுமாயின், பல மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவழிக்க வேண்டும். அத்துடன், அதற்காக விண்வெளி தொடர்பான பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இதேவேளை, தற்போது ரஷ்யாவின் விண்வெளி ஓடமானது 3 விண்வெளிச் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு [illegible]த்தமாகி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிரும் பனியும் பற்றிய

வசந்தம், கோடை, இலையுதிர், குளிர் எனும் நான்கு பருவங்கள் பற்றி அறிந்திருக்கிறோம். ஒவ்வொரு காலத்திற்கும் வெவ்வேறான காலநிலையும், அதற்கேற்ற வெவ்வேறான சூழலும் அதன் விளைவான தாக்கங்களும் மாறுபட்டவை. இந்நான்கு பருவங்களில் குளிர் பருவமானது உலகின் பல நாடுகளில் ஆரம்பமாகும் போது அப்பிரதேசம் இயற்கை எழில் கொஞ்சும் இரம்மியமான தோற்றத்தைக் கொடுத்தாலும் உறைபனியால் உறைந்து மிகச் சிரமங்களையும் கொடுக்கத் தவறுவதில்லை. அதிகுளிர் காலநிலையானது கடும்பனி வீழ்ச்சி அல்லது படிவு வீழ்ச்சியை ஏற்படுத்தி அப்பிரதேசத்தில் உறைபனியாகப் படிந்து விடும். அதனால், இப்பகுதியில் வாழும் மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களும் தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு நடத்த பெரும் போராட்டங்களை நடத்த வேண்டியுள்ளது. இதோ அந்தக் குளிர் காலத்தைப் பற்றிய தகவல்கள் சில.

சுவிட்ஸர்லாந்து, நோர்வே உள்ளிட்ட ஸ்கென்டிநேவிய நாடுகள், ஐஸ்லாந்து, கிரீன்லாந்து, அலாஸ்கா போன்ற நாடுகளின் பெயர்களைக் கூறியவுடன் எமது மனக்கண்ணில் நிழலாடுவதோ பனி மலைகளும் பனியால் உறைந்த நிலமும் வெண்மை படர்ந்த ஓர் அற்புதமான சூழலும்தான்.

வசந்தம், கோடை, இலையுதிர், குளிர் ஆகிய பருவங்கள் நான்கு. இப்பருவ மாற்றங்கள் அனைத்தும் நடைபெறுவதற்குரிய காரணங்களோ பல. பூமி சூரியனை அதன் சுற்றுப்பாதையில் சுற்றுவதும் புவி 231/2 சாய்வாக இருப்பதாலும் வெப்பவலய நாடுகளில் இப்பருவகால மாற்றங்களைத் தெளிவாக அறி முடியாமல் இருக்கின்றது. எனினும், பூமத்திய ரேகையிலிருந்து வடக்கேயும் தெற்கேயும் துருவங்களை நோக்கிச் செல்லும்போது இந்தப் பருவகால மாற்றங்களை தெளிவாக உணரலாம். இப்பருவங்களில் குளிர் பருவத்திலேயே பனிமழை அல்லது பனி வீழ்ச்சி படிவு வீழ்ச்சியாக விழுகின்றது.

இக்காலகட்டத்தில் சூழலின் சராசரி வெப்பநிலை-30 பாகை செல்சியஸ் வரை குறைவடையும். வடவரைக் கோளத்தில் அமைந்துள்ள நாடுகளுக்கு டிசம்பர், ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் குளிர்காலநிலை நிலவும். உலகின் தென்னரைக் கோள நாடுகளுக்கோ ஜூன், ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் குளிர் பருவ காலம் காணப்படும்.

குளிர் காலத்தில் மரஞ்செடி கொடிகள் மலைகள், நிலம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளும் பனியால் மூடப்பட்டிருக்கும். அக்காலத்தில் அப்பிரதேசம் முழுவதும் வெண் பஞ்சால் படைக்கப்பட்ட ஒரு சித்திரம் போல் காட்சியளிக்கும். குளிர் காலநிலையால் தோன்றும் பனிப்படலங்களும், உறைபனி சூழ்நிலையும் எங்கும் காணப்படுவது சூழலை அழகுபடுத்திப் பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தாலும் எங்கும் வெறுமையான அமைதியான ஒரு சூழ்நிலையே காணப்படும்.

## உறைபனிப் படலம்

முகில் கூட்டங்களில் காணப்படும் நீராவியானது அதிக குளிரின் காரணமாக பனிக்கட்டிகளாக மாறும். இந்த முகில் கூட்டங்களில் இருந்து விழும் பனித்துளிகள் சேர்ந்து படிவுகளாக உறைந்து காணப்படுவதே இந்த உறைபனியாகும். பனிமழை, பனிக்கட்டி மழை, பனித்துளி, படிவு வீழ்ச்சி, பனிப்புயல் ஆகியவை மூலம் பனிப்படலம் உருவாகின்றது. பனிப்படலமானது பனிக்கட்டி அல்லது ஐஸ்கட்டி மூலமே உருவாகின்றது. சிறிய பனிக்கட்டியானது பல வடிவங்களில் உருவாகின்றது. ஊசி வடிவத்திலும் நட்சத்திர வடிவத்திலும்கூட பனிக்கட்டிகள் காணப்படுகின்றன.

சாதாரணமாக பனிக்கட்டியொன்று 1 சென்ரிமீற்றர் அளவுடையதாக இருக்கும். சமீபகாலத்தில் 1997 முதல் 1998 வரையிலான காலப்பகுதியே அதிக பனிக்கட்டிகள் விழுந்த காலமாகும். அக்காலப் பகுதியில் மவுன்ட் பேக்கர் பிரதேசத்தில் 29 மீற்றர் உயரத்திற்கு பனிமழை வீழ்ச்சி ஏற்பட்டது.

பனிக்கட்டிகள் ஒன்றின்மீது ஒன்று வழுக்கிச் செல்லும். அதனால், பனிக்கட்டிகள் மீது அங்குமிங்கும் சறுக்கிச் செல்லமுடியும். ஒரு கையளவு பனிக்கட்டியை எடுத்துப் பார்த்தால் அது எவ்வளவு மென்மையானது என்பது புரியும்.

## அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்பு

குளிர் காலத்தின் ஆரம்பத்தோடு மக்களின் அன்றாட வாழ்வு பெரிதும் பாதிப்படையும். கடும் பனி வீழ்ச்சியும் கடுங்குளிரும் இத்தகைய நிலைக்கு காரணமாகும். இக்கடும் உறைபனியானது அடித்தள உட்கட்டமைப்புகளுக்கும் சேவைகள் வழங்கலுக்கும் பெருந்தடையாக அமைகின்றது. மின்சாரம், தொலைபேசி மற்றும் எரிவாயு குழாய்களுக்கும் இடையூறு ஏற்படுவது இக்காலத்தில் ஏற்படும் முக்கிய பிரச்சினையாகும். கடும் பனிப்படிவுகள் படிந்தால் பாதைகள் அனைத்தும் பனிக்கட்டியால் மூடப்பட்டிருக்கும். அதனால், குளிர் காலத்தில் அப்பனிக்கட்டிகளை கடந்து செல்ல வேண்டி ஏற்படும். அதற்கென வடிவமைக்கப்பட்ட பனிச்சறுக்கு வண்டிகளைப் பாவிப்பர். இவ்வண்டிகள் படர்ந்திருக்கும் பனிப்படைகள் மீது சறுக்கிச் செல்லக்கூடியன. இச்சறுக்கு வண்டிகளை இழுப்பதற்கு குதிரைகள், நாய்கள், துருவமான்கள் போன்ற மிருகங்களைப் பயன்படுத்துவர். குளிர் பருவத்தில் பாடசாலைகள், அலுவலகங்கள், தேவாலயங்கள் போன்றவற்றின் செயற்பாடுகளை சரியான நேரத்தில் சரியான முறையில் கொண்டு நடத்துவது சிரமமான காரியமாகும். அதனால், கடும் பனி நிலவும் காலத்தில் பாடசாலைகள், அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களின் செயற்பாடுகளையும் இரத்துச் செய்வர். அதிகமாக குளிர் பருவத்தில்தான் பாடசாலை விடுமுறை காலமும் அமைகின்றன. மிகச்சிறிய அளவில் பனிவீழ்ச்சி நிகழும் இடங்களில் கூட திடீரென கடுமையான பனிவீழ்ச்சி ஏற்பட்டு மூடத்தொடங்கும். இச்சந்தர்ப்பங்களில் பனிச் சூறாவளி, பனிமலை சரிந்து விழுதல் போன்ற ஆபத்துக்களில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள மக்கள் முயற்சி எடுக்காவிட்டால் அவர்கள் ஆபத்தில் சிக்கவேண்டியேற்படும்.

பனிமழைப் பொழியும் நாடுகளில் வாழும் மக்கள் குளிர் பருவம் வருவதற்கு முன்பே அதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வர். உணவு, விறகு சேகரித்தல், ஆடை, அணிகளை தயார்படுத்தல் என்பன இதில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மக்களின் உடை, தலைப்பகுதிஉடை, காலணிகள் என்பன கடுங்குளிருக்கு தாக்குப்பிடிக்கும் வகையில் தயார் செய்யப்படுகின்றன.

செம்மறியாட்டு உரோமங்கள் போன்ற மிருகங்களின் உரோமங்களினால் உடைகள் தயாரிப்பதால் அவை உடலின் வெப்பநிலையை பாதுகாக்கின்றன. வீடுகளில் இருக்கும் சூளைகளில் (காளவாய்களில்) தீ மூட்டி வீடுகளைச் சூடேற்றி கடுங்குளிரைத் தவிர்ப்பதற்கு சில நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். ஆனால், இன்று விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மின்சார மற்றும் வாயுவினால் இயங்கக்கூடிய வெப்பமாக்கி சாதனங்கள் மூலம் தமது வீட்டையோ அலுவலகத்தையோ வெப்பமாக்குகின்றனர்.

## குளிர் பருவ விவசாயம்

குளிர் பருவமும் அதனால், ஏற்படும் பனிப்படலமும் விவசாய நடவடிக்கைகளுக்கு சாதகமானதாகவும் பாதகமானதாகவும் விளங்குகின்றது. நிலவும் கடுங்குளிரை ஓரளவு மட்டுப்படுத்துவதிலும் கட்டுப்படுத்துவதிலும் பனிக்கட்டிகளுக்கென தனித்துவமான சக்தியுண்டு. பனிக்கட்டிகள் எல்லாம் ஒன்றிணைந்து உருவாகும் பனிப்படலமானது படலமாக நிலத்தை மூடி வெப்பத்தைப் பாதுகாக்கின்றது. இதனால், அதிக குளிரான காலத்திலும்



பனி விளையாட்டுக்கள்
பிள்ளைகள் முதல் வயோதிபர் வரை அனைவரும் பனி விளையாட்டுக்களில் விருப்பம் உடையவர்கள். குளிர் பருவத்தில்தான் இதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.




ஐஸ் ஹொக்கி
ஐஸ் கட்டிகளை பயன்படுத்தி செயற்கையாக உருவாக்கப்பட்ட மைதானமோ அல்லது இயற்கையாகவே படிந்துள்ள பனிப்படலத்தில் ஹொக்கி விளையாடுதல். சிறு சக்கரங்களுடன் கூடிய காலணிகள் இதற்கு பயன்படுத்தப்படும்.



ஸ்னோ போல்ஃபைட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்புத தகவல்கள்



நாய்களால் இழுத்துச் செல்லப்படும் பனிச்சறுக்கு வண்டிகள்.



பனிக்கட்டிகளின் பல்வேறு தோற்றங்கள்

கூட கடும்பனிக்கு முகம் கொடுக்கும் விவசாய பயிர்கள் பாதுகாக்கப்படுகின்றன. அதேவேளையில், வசந்தகாலத்தில் இந்த ஒன்றிணைந்த பனிக்கட்டிகளும் பனிப்படலமும் உருகி நீராக ஓடி விவசாய நிலங்களுக்குத் தேவையான நீரைப் பாய்ச்சுகின்றது. இதன் மூலமே துருவப் பகுதி மக்கள் நீரைப் பெறுகின்றனர். எனினும், பனிக்கட்டிகள் பயிர்கள் மீது நேரடியாக விழும்பொழுது பயிர்களுக்கு சில பாதிப்புகள் ஏற்படுகின்றன.

குளிர் வலயத்தின் மலைப்பாங்கான உயர்ந்த பகுதிகளில் ஐஸ் வீடுகளை அமைத்து வைக்கோலால் வேய்ந்து அதனுள் தமது விளைச்சலை களஞ்சியப்படுத்தி வைப்பர். ஐஸ் வீடுகளின் உட்பகுதி வெப்பத்தை தக்க வைத்துக் கொள்ளக்கூடியது. அது விளைச்சலைப் பாதிக்காமல் பாதுகாக்கின்றது.

## வனவிலங்குகளின் குளிர்காலம்

குளிர் பருவ ஆரம்பத்துடனேயே இவ்வலயத்திலுள்ள சில பறவைகளும் மிருகங்களும் வேறு பிரதேசங்கள் நோக்கிச் செல்ல ஆரம்பிக்கும். எனினும், 'காடினல்' எனும் பறவையோ கடுங்குளிருக்கும் முகம் கொடுத்து தாக்குப்பிடித்து அப்பிரதேசத்திலேயே தொடர்ந்தும் வாழும். சில வகையான வண்ணத்துப்பூச்சிகளும் குளிர் காலத்தில் குளிர் வலயத்திலிருந்து வெளியேறி வேறு பிரதேசங்களில் சஞ்சரிக்கும். குளிர் பருவத்தில் நீர் தடாகங்கள், குளங்கள் ஆறுகள் அனைத்திலும் உள்ள நீர் உறைந்து உறைபனியாக, அல்லது உறைபனிப்படலமாக காட்சியளிக்கும். குறிப்பாக வட, தென் துருவங்களில் இந்நிலைமை அதிகமாக காணப்படுகின்றது. எனினும், பனிப்படலத்தின் மேல் மிதக்கும். நீரியல் உயிரினங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. பருவகால வேறுபாடு நிறைந்த சூழலில் வாழும் பல வன விலங்குகளுக்கு கடுங்குளிரையும் சந்தித்து அதற்கேற்ற முறையில் இசைவாக்கம் அடையும் திறன் காணப்படுகின்றன. குளிர் பருவத்தில் தனது பல்வேறு தொழிற்பாடுகளை குறைத்து இவ்விலங்குகள் காலநிலைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்பத் தம்மை இசைவாக்கம் ஆக்கிக் கொள்கின்றன. அணில்கள், தவளைகள், கரடிகள், பாம்புகள், சில ஊர்வன, வௌவால்கள் ஆகியன இத்தகைய குளிருக்கு இசைவாக்கம் அடையக்கூடிய உயிரினங்களில் சிலவாகும். இவை குளிர் பருவத்தில் அதிகமான நேரத்தை நித்திரை கொள்வதன் மூலமே கழிக்கின்றன. தனக்கு தேவையான உணவைத் தேடுவதற்கு மாத்திரமே கூடுகளில் இருந்து வெளியே வரும். மீண்டும் வெப்பக் காலநிலை ஆரம்பிக்கும் வரை அவை தமது கூட்டினுள் இருந்து குளிரைச் சமாளிக்கும். எனினும் சிலவகை அணில்கள், புனுகுப் பூனைகள், முள்ளம்பன்றிகள், கீரி இனங்கள் குளிர் காலத்திற்கான உணவை முன்கூட்டியே தேடிச் சேமித்து களஞ்சியப்படுத்தி வைத்துக்கொண்டு குளிர் பருவத்தில் முழுமையாக வெளியே வராமல் தவிர்த்துக் கொள்கின்றன.

குளிர்வலயத்தில் வாழும் உயிரினங்களில் குறிப்பாக மிருகங்கள் நீண்ட உரோமங்களையும் பறவைகள் நீண்ட சிறகுகளையும் கொண்டு காணப்படுகின்றன. குளிர் காலநிலைக்கும் பனிப்படல சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் அதற்குப் பொருந்தக்கூடிய விதமாக இவ் உயிரினங்களின் உரோமங்களும் இறகுகளும் பனி நிறத்தை ஒத்த வெண்ணிறமாக காணப்படுகின்றன. இந்த உயிரினங்களின் தோலின் நிறமும் பருவகால மாற்றத்திற்கேற்ப மாறுதலடைவது இயற்கையின் கொடையாகும்.

## உறைபனியால் சூழலின் வெப்பம் கட்டுப்படுத்தப்படும் விதம்

பனிமலைகள் புவியின் வெப்பத்தை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்களிப்பைச் செய்கின்றன. புவியினுள் பிரவேசிக்கும் சூரிய கதிர்களின் நுண்ணிய அலைகள் வெள்ளை நிறப் பனிப்படலம் மீது பட்டு பிரதிபலிக்கச் செய்கின்றது. அங்கு பனிக்கட்டி வாயு திணிவாக பாதுகாப்பதுடன் முகில்களுக்கிடையில் வெப்பப் பரிமாற்றத்தின் காரணமாக புவியின் வெப்பம் கட்டுப்படுத்தப்படுகிறது. இத்தகைய வெப்பப் பரிமாற்றத்தின் காரணமாக பனிமழை வீழ்ச்சிக்குப் பிறகு சூழலின் வெப்பநிலை சிறிதளவு அதிகரிப்பதை காணலாம். அத்துடன் வெப்பக் கதிர்வீச்சு பிரதிபலிப்பால் (Reflect) வெப்பமானது சரியான மட்டத்தில் நிலவும். குளிரின் முடிவுடன் பனிப்படலம் உறையத் தொடங்கும். பருவ கால மாற்றங்கள் நிகழும். இப்பகுதிகளில் நீரைப் பெறும் பிரதானமான வழிமுறையாக இருப்பது இப்பனிப்படலமாகும்.

## கலைஞர்களின் காட்சியகம்

குளிர் பருவம் கடுமையான ஒரு சூழலை தோற்றுவித்தாலும் அது வேறுபட்ட சூழலும் அழகிய ரம்மியமான காட்சியும் கலைஞர்களின் மனதை பெரிதும் கவர்வன. அக்காட்சி சித்திரக் கலைக்கு, காவியங்களுக்கு, நாவல்களுக்கு புனைக்கதைகளுக்கு நல்லதொரு கரும் பொருளாகும். வெள்ளை வெளேரென காட்சியளிக்கும் பனிக்கட்டிகளில் சிலைகளை வடிவமைப்பது மிகச் சிறந்த ஒரு கலைப்படைப்பாகும். இத்துறையில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். குளிர்பருவத்தில் ஏற்பாடு செய்யப்படும் பனிமூலம் செய்யப்பட்ட படைப்புகளின் போட்டிகளை பல நாடுகளில் கண்டு களிக்கலாம்.



இக்லு பனி வீடு

ப.இரஞ்சித் ஜெயகர்



பனிக்கட்டிகளால் உருவாக்கப்பட்ட ஒரு கலைப்படைப்பு



பனிக்கட்டிகளை சிறிய பந்துகளாக உருட்டி அதனை சகாக்களுடன் அடித்து விளையாடுதல் சிறுபிள்ளைகள் மத்தியில் மிக விரும்பி விளையாடும் விளையாட்டு.



ஸ்னோபோர்டிங்

அதிகமானோர் விரும்பி விளையாடும் விளையாட்டு இரு கால்களுக்கு பலகைத்துண்டுகள் இரண்டை இணைத்துக்கொண்டு பனியால் மூடுபட்ட மலையின் மூடிய பனிப்படலத்தை தள்ளுதல்.



ஐஸ் பைக்கிங்

குளிர் பருவத்தில் கடுங்குளிர் பிரதேசத்தில் பனிப்படலத்தின் மேல் (சைக்கிள்கள்) துவிச்சக்கரவண்டிகளைச் செலுத்துதல்.



பனி மனிதர்களை உருவாக்குதல்

பனியால் மனிதர்களை உருவாக்குதல். குழந்தைகள் சிறுபிள்ளைகளின் மத்தியில் மிகுந்த விருப்பத்திற்குரியது.



ஸ்கிங்

(f) பைபர்கிளாஸ் மூலம் செய்யப்பட்ட ஸ்கின் எனும் விளையாட்டுச் சாதனத்தில் பனிப்படலத்தின் மேல் சறுக்கிச் செல்லும் விளையாட்டு. இவ்விளையாட்டுப் போட்டிகள் குளிர் பிரதேசங்களில் முக்கியமாக நடைபெறும்.



ஸ்லெடிங்


மலைச்சரிவுகளில் மேலிருந்து சரிவுகளூடாக பனிவாகனத்தை செலுத்தும் விளையாட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உலகம் போற்றும் ஆங்கிலக் கவிஞர், ஷேக்ஸ்பியர் மறைந்து இன்றோடு (23.04.2008) சரியாக 392 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. இலக்கியம், கலை, எழுத்தாக்கம் எனப் பல திறமைகளைத் தன்னுள் கொண்டு அவற்றை உலகுக்கு வெளிச்சமிட்டுக் காட்டியதால் இன்றும் அவர் நினைவு கூரப்படுகிறார். தலைமுறைகள் பல கடந்து விட்ட நிலையிலும் ஷேக்ஸ்பியரின் புகழ் இன்றும் உலகில் நிலைத்த வண்ணமிருக்கின்றது.

ஸ்ட்ரட்ஃபோர்ட் அபொன் எவொனிலுள்ள ஷேக்ஸ்பியர் பிறந்த வீடு





# உலகம் போற்றும் இலக்கியவாதி வில்லியம் ஷேக்ஸ்பியர்




ஷேக்ஸ்பியரின் படைப்புகளை உள்ளடக்கி (1626இல்) வெளியிடப்பட்ட புத்தக அட்டை

இலக்கிய உலகில் ஒரு சிறந்த ஆங்கில நாடக ஆசிரியராகவும் எழுத்தாளராகவும் நடிகராகவும் போற்றப்படுகின்ற வில்லியம் ஷேக்ஸ்பியர் 1564 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ஆம் திகதி ஸ்ரட்ஃபோர்ட் அபொன் எவொன் (Stratford Upon Avon) எனுமிடத்தில் பிறந்தார். இவர், ஜோன் ஷேக்ஸ்பியர் - மேரி ஆர்டன் தம்பதிகளின் புதல்வராவார்.

வில்லியம் ஷேக்ஸ்பியர் இளவயதில் அதாவது தனது 18ஆவது வயதிலேயே தன்னிலும் சில வருடங்களுக்கு மூத்த ஏன் ஹதாவே (Anne Hathaway) என்பவரைத் திருமணம் செய்தார். இவர்களிருவருக்கும் பிறந்த முதல் குழந்தையின் பெயர் சுசன்னா என்பதாகும். அத்துடன், இவர்களுக்கு ஹெம்நெட், ஜூடித் என்ற பெயரில் இரட்டைக் குழந்தைகளும் பிறந்தன.

மாநிறத்தில் - கம்பீரமாக - பார்ப்பவர்களை வெகுவாகக் கவரும் தோற்றம் கொண்ட இவர், தோற்றத்தில் மாத்திரமன்றி மனிதப் பண்புகளிலும் சிறந்து விளங்கினார். அழகை இரசிக்கக் கூடியவர். மனித வாழ்வை அர்த்தமுள்ளதாக எவ்வாறு மாற்ற வேண்டும் என்ற நுட்பம் தெரிந்து அதன்படி வாழ்ந்தும் காட்டியவர்.

தனது எழுத்தாக்கங்களில் கிராமிய வழக்கைக் கையாண்டிருந்தார். நகைச்சுவை, வரலாறு என பல்துறைகளிலும் தனது ஈடுபாட்டைச் செலுத்தினார். இவர் எழுதிய நகைச்சுவை நாடகங்களுக்கு உதாரணமாக; Merchant of Venice, As you like it, A Midsummer போன்றவற்றைக் குறிப்பிடலாம். அவ்வாறே, வரலாற்றுக் கதைகளுக்கு உதாரணமாக; ஹென்றி IV 1,2 பகுதிகள், ஹென்றி V , ஹென்றி VI 1, 2, 3 பகுதிகள், ரிச்சர்ட் II, ஜோன் மன்னன் என்பனவற்றைக் குறிப்பிடலாம். நாடக வரிசையில் ஹெம்லட், ஒதெலோ, ரோமியோ - ஜூலியட், ஜூலியஸ் சீஸர், மெக்பத் என்பனவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.




இவர், சிறந்த எழுத்தாளராக மட்டுமன்றி உலகம் போற்றும் கவிஞராகவும் திகழ்ந்தார். அறிவு பூர்வமான, ஆக்க பூர்வமான சிறந்த சிந்தனைகளை இவரது கவிதைகளிலும் ஏனைய இலக்கியப் படைப்புகளிலும் காணக்கூடியதாக இருக்கும். இவரால் எழுதப்பட்ட எண்ணிலடங்கா நாடகங்கள் உலகளவில் புகழ் பெற்றுள்ளதோடு மேலைநாடுகளின் இலக்கியங்களில் பாரிய தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளன எனலாம். இவர் துன்பியல், வரலாறு, நகைச்சுவை, காதல் என பல கோணங்களிலிருந்தும் நாடகங்களை எழுதியுள்ளார்.

இவரது பெரும்பாலான நாடகங்கள் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதோடு இன்றளவிலும் நடித்துக் காட்டப்படுகின்றன. இவரது சில நாடகங்கள் பாடசாலை பாடத்திட்டங்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி, கலாசாரம், அரசியல், போன்ற பல்வேறு துறைகளிலும் ஷேக்ஸ்பியரின் வாழ்க்கை அனுபவங்கள் பரந்துள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது.

பலதரப்பட்ட திறமைகளையும் குணாதிசயங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கிய சிறந்த எழுத்தாளரான வில்லியம் ஷேக்ஸ்பியர் 1616, ஏப்ரல் 23ஆம் திகதி உயிர் துறந்தார்.

- ஸாபீனாஸ்

Atlas சித் ரூ -7

## அகில இலங்கை
## சித்திரம், உறுப்பெழுத்து, உரைநடை கட்டுரைப்போட்டி - 2008

### போட்டி முடிவுத் திகதி ஏப்ரல் 30ஆம் திகதி வரை நீடிப்பு

சிலோன் பென்சில் கம்பனி ஏழாவது தடவையாக இப்போட்டிகளை ஏற்பாடு செய்துள்ளது. நீங்கள் சித்திரம், உறுப்பெழுத்து, உரைநடை கட்டுரை ஆகிய போட்டிகளுக்கு உங்கள் விண்ணப்பங்களை இப்போது அனுப்பலாம். இப்போட்டிகளுக்கு கல்வியமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் அவர்களால் வழி நடத்தவும்படுகின்றது. பெறுமதி மிக்க பணப்பரிசில்கள் தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள், சான்றிதழ்கள்,பரிசுப் பொதிகளை வெல்லுங்கள்.

விபரங்களும், நிபந்தனைகளும்

அனைத்திலங்கை சித்திரப்போட்டி

- முதல் சுற்றுக்கு ஒருவர் எத்தனை சித்திரங்களையும் அனுப்பலாம்.
- 35CM x 45CM வெள்ளைத்தாளில் ஏதேனும் தலைப்பில் எத்தனை விண்ணப்பங்களும் அனுப்பலாம்.
- பெஸ்டல் வர்ணம் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.
- அற்லஸ் பெஸ்டல் பயன்படுத்தினால் அதன் நீலநிற உறையை ஆக்கத்தின் பின்னால் ஒட்டவேண்டும். ஆனால், இது நிபந்தனை அல்ல.

| தரம் | தலைப்புக்கள் |
|---|---|
| 6-7-8 | 1. ஒழுக்க சீலம் வாழ்க்கைக்கு அணிகலனாகும்.<br>2. வாசிப்பு மனிதனை பூரணப்படுத்தும்.<br>3. பொது சொத்துக்கள் காக்கப்பட வேண்டியதன் அவசியம். |
| 9-10-11 | 1. போதைப்பொருள் பாவனையை ஒழிப்போம்.<br>2. கைத்தொழில் மூலமாக நாட்டை கட்டியெழுப்புவோம்.<br>3. இயற்கை வளங்களை காத்திடல். |
| 12-13 | 1. இலங்கையின் பொருளாதாரமும் உலக மயமாக்கலும்.<br>2. இலங்கையில் ஊடக தர்மம்.<br>3. இலங்கையின் சட்டமுறைமைகளும் அதிகரித்து வரும் குற்றங்களும் |

அனைத்திலங்கை உறுப்பெழுத்துப் போட்டி

- ஆரம்பப் பாடசாலை மாணவர்க்கு மட்டும் (தரம் 1-5 வரை)
- ஒருவர் ஒரு விண்ணப்பத்தை மட்டும் அனுப்பலாம்.
- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும். (மொழிப் பாடநூலில் இருந்து புல்ஸ்காப் பேப்பரின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதவும்)

| பிரிவு | சொற்கள் | ஊடகம் |
|---|---|---|
| 1-2-3 | 100 | பென்சில் |
| 4-5 | 150 | போல் பொயின்ற் பேனை |

அகில இலங்கை உரைநடை கட்டுரைப் போட்டி

- இப்போட்டியில் தரம் 6 முதல் 13 வரையிலான மாணவர்கள் பங்கு பற்றலாம்.
- ஒருவர் ஒரு விண்ணப்பம் மட்டுமே அனுப்பலாம்.
- சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஏதேனும் மொழியில் (புல்ஸ்காப் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதவும்)
- சொற்கள்: தரம் 6, 7, 8 - 250 சொற்கள்.
  தரம் 9, 10, 11 - 350 சொற்கள்.
  தரம் 12, 13 - 500 சொற்களுக்குக் குறையாமல்.
- கட்டுரை உறுப்பெழுத்து அம்சங்களில் எந்த வகை அற்லஸ் போல்பொயின்ற் பேனையைப் பயன்படுத்தினீர்கள் என்பதை இறுதியில் குறிக்கவும்.

சித்திரக் கண்காட்சியும் பரிசளிப்பு விழாவும்

பரிசளிப்பு விழா: செப்டெம்பர்-09, 2008

அனுப்பப்படும் ஆக்கங்கள் பாட ஆசிரியர் அல்லது வகுப்பாசிரியரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு பாடசாலை அதிபரின் றப்பர் முத்திரை இடப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் விஜய், விஜய, Funday Times (The Sunday Times) என்பவற்றில் பிரசுரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட உங்கள் விண்ணப்பங்களை 'அற்லஸ் சித்ரூ-07' தபால் பெட்டி இல.30, களனி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பிரதான அனுசரணை: ஊடக அனுசரணை:

விண்ணப்பப் படிவம்
சித் ரூ 7
அனைத்திலங்கை சித்திரம், உறுப்பெழுத்து - உரைநடை கட்டுரைப் போட்டி - 2008
அலுவலக பாவனைக்கு:
பெயர்: (முதலெழுத்துடன் ஆங்கிலத்தில்)
வீட்டு முகவரி:
பிறந்த திகதி: ஆண் பெண்
தொலைபேசி இல: வகுப்பு
பாடசாலை பெயர்/முகவரி (ஆங்கிலத்தில்)
மாவட்டம்
பிரதேசம்
தலைப்பு
மொழி
வகுப்பு ஆசிரியர் அத்தாட்சி:

மேலதிக விபரங்களுக்கு சிலோன் பென்சில் கம்பனியுடன் தொடர்பு கொள்க. தொ.பே-011-2912874, 011-2912879.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை அவதான நிலையம் தகவல்களை பெறும் முறை



17 பில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட பாரிய வெடிப்பின் பின் படிப் படியாக நாம் இன்று வாழும் பூமியும், வளி மண்டலமும் உருவாகின. உலகின் தோற்றம் பற்றி இன்று நிலவும் விஞ்ஞானக் கொள்கை இதுவே ஆகும்.

அன்று முதல் இன்றுவரை உலகில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதனால்,காலநிலையிலும் இம்மாற்றங்கள் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தின என்பதற்கான சான்றுகள் நிறையவே இருக்கின்றன. காலநிலையானது மனித வாழ்வில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதால் அதைப் பற்றிய அறிவையும் தகவல்களையும் பெற மனிதன் மிகுந்த ஆர்வத்துடன் இருக்கின்றான். இதனால், வானிலை எதிர்வு கூறலானது மனித வாழ்வுடன் பின்னிப்பிணைந்ததாக இருக்கிறது. வானிலை எதிர்வு கூறலை வானிலைத் திணைக்களமே அறிவிக்கின்றது. அதன் பொறுப்புக்களையும் செயல்பாட்டினையும் விரிவாகப் பார்ப்போம்.

## விவசாய காலநிலை


விவசாய நடவடிக்கைகளுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படும் காலநிலைத் தகவல்கள் பல இருக்கின்றன.

* சூரியக் கதிர் வீச்சு.
* ஒருநாளில் சூரிய ஒளி கிடைத்த நேரத்தின் மொத்த அளவு.
* நாளொன்றுக்கு நீர் ஆவியாகும் அளவு.
* புல்லின் மேல் காணப்படும் உச்ச வெப்பத்தின் அளவு
* தரையில் பல்வேறு ஆழத்தில் காணப்படும் வெப்பம் என்பன

இத்தரவுகளைத் தீர்மானிப்பதற்கு, வெப்பமானி, நீராவித் தடாகம், தூசியின் வெப்ப அளவீட்டு உபகரணம் என்பன பயன்படுத்தப்படுகின்றன







## வானிலை ரேடார் தகவல்கள்

சூறாவளி ஆபத்துக்களை எச்சரிக்கும் 'ரேடார்' தரவுகள் திருகோணமலை வானிலை அவதான நிலையத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளன.

## விமான சேவை அறிக்கை



விமானப் பயணப்பாதையில் முக்கிய இடங்களில் காற்றின் வேகம், காற்றின் திசை, வெப்பம் மற்றும் வேறு முக்கிய வானிலைத் தகவல்கள் உடனடியாக விமான நிலைய காலநிலை விஞ்ஞான அலுவலகத்தின் ஊடாக வழங்கப்படுகின்றன.

இதற்கு மேலாக வானில் காற்று மற்றும் காலநிலை சம்பந்தமான எதிர்வு கூறும் தேசப்படம், தொடர்பாடல் செய்மதி மூலம் உலகெங்குமுள்ள வானிலை எதிர்வுகூறும் நிலையங்களில் பெற்றுக்கொள்ளும் வசதிகள் உண்டு.

## தெளிவான புவிச்செய்மதிப் படங்கள்

இவை புவியுடன் சம்பந்தப்பட்டு அசையாமல் இருக்கின்றன. அதாவது புவிச்சுற்றுகையின் வேகத்திலேயே சுற்றுகின்றமையால் இடம் மாறுவதில்லை.

இச்செய்மதி மூலம் ஒவ்வொரு மூன்று மணித்தியாலத்திற்கும் ஒருமுறை கொழும்பு தேசிய காலநிலை மத்திய நிலையத்திற்கு மேகங்கள் குறித்த படங்கள் கிடைக்கின்றன.

இத்தகைய செய்மதியில் எப்பொழுதும் புவியின் ஒரு பகுதி எமது கண்களுக்குப் புலப்படும். இன்று கிழக்கு நெட்டாங்கு $140^{\circ}$ க்கு மேலாக ஜப்பானின் செய்மதியும் கிழக்கு நெட்டாங்கு $74^{\circ}$ க்கு மேலாக இந்திய செய்மதியும் கிழக்கு நெட்டாங்கு $76^{\circ}$ க்கு மேலாக ரஷ்ய செய்மதியும் எமக்கருகில் இருக்கின்றன.

இந்த, நிலையான செய்மதியானது கண்காணிப்பிற்காக 36000 கிலோமீற்றர் உயரத்தில் சுற்றுகின்றது.

## துருவச் சுற்றுகை செய்மதிப் படங்கள்

வட, தென் துருவங்கள் ஊடாக புவியைச் சுற்றி சுற்றுகையில் ஈடுபடும் துருவச் சுற்றுகை செய்மதிகள் இரண்டு செயல்படுகின்றன. அவை நோவா 12, நோவா 14 என்பனவாகும். இவை இலங்கைக்கு மேலாக மிக அருகில் பயணிக்கும் பொழுது புலப்படும் எல்லைப்பகுதி மேகங்களின் படங்களை கொழும்பு தேசிய காலநிலை மத்திய நிலையத்திற்கு அனுப்புகின்றன. கடுங்காற்று அல்லது சீரற்ற காலநிலையின் ஆரம்ப அறிகுறிகளையும் அதன் வளர்ச்சியையும் பரீட்சிக்க இவை உதவுகின்றன. பயணப் பாதை சம்பந்தமான தெளிவான அறிவைப் பெறவும் இச்செய்மதிப்படம் பெரிதும் உதவுகின்றது. துருவச் சுற்றுகையில் ஈடுபடும் இச் செய்மதி 850 கி.மீற்றர் உயரத்தில் செயல்படுகிறது.

## சமுத்திரத் தரவுகள்



சமுத்திரத்தில் இருக்கும் கப்பல்களின்மூலம் பெற்றுக் கொள்ளப்படும் புவி மேற்பரப்பு கணிப்பீடுகளும், கடலின் இயல்பு நிலை சம்பந்தமான தகவல்களும் இலங்கை டெலிகொம் (Srilanka Telecom) நிறுவனத்தின் கொழும்பு வானொலி மத்திய நிலையம் அல்லது 'இன்மார் [illegible] மத்திய நிலையத்திற்கு கிடை[illegible]

### வானிலைத் தகவல்கள் ஏன் முக்கியத்துவம் பெறுகின்றன?

வானிலை அவதானமானது விமானப் பயணங்களுக்கு மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றது. விமானம் வான் நோக்கி ஏறுவதும், தரையிறங்குவதும் காலநிலையில் சாதக நிலைமையை வைத்தே நடைபெறுகின்றது. காற்றின் வேகம் மற்றும் காற்று வீசும் திசை, வெப்பம், அமுக்கம் என்பன பற்றி அறிவது முக்கியமாகும்.

கடுமையான மேல் மற்றும் கீழ் காற்று, மற்றும் கருமுகில் கூட்டம் என்பனவும் வானிலையில் மிகவும் ஆபத்து விளைவிக்கக் கூடியவையாகும். அச்சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்படும் பயணத்தின்போது தேவையான எரிபொருளின் அளவு, பயணிகள் உள்ளிட்ட விமானத்தில் கொள்ளக்கூடிய உச்ச நிறையின் அளவு என்பன தீர்மானிக்கப்படுகின்றன.

### மீனவர் மற்றும் கடற்பயணங்கள்

புயல், கடுங்காற்று உள்ளிட்ட கடலில் காணப்படும் சீரற்ற காலநிலை குறித்தும் கடலின் நிகழ்தன்மை குறித்தும் கடல் அலை மற்றும் காற்றின் வேகம், திசை உள்ளிட்ட பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கும் பயன்மிகு சேவையொன்று 24 மணிநேரமும் மீனவ சமுதாயத்திற்கு வழங்கப்படுகின்றது.

### பொதுமக்கள்

இயற்கையான காலநிலை விளைவுகளை (வறட்சி, மழை, புயல்) தடுத்து நிறுத்தும் சக்தி மனிதனுக்கு இல்லை. எனினும், அது குறித்து முன்கூட்டியே அறிந்து கொண்டு அதனால் ஏற்படும் உயிராபத்துக்களையும் இடர்களையும் மனிதனுக்கு அறிவித்து அவனுக்கு ஏற்படும் இடர்களில் இருந்து பாதுகாக்க அல்லது குறைக்க காலநிலை மத்திய நிலையத்தினரால் முடியும்.

### விவசாயிகள்

விவசாயிகள் நன்மை கருதி மாவட்டங்கள் தோறும் காலநிலை எதிர்வு கூறல் வெளியிடப்படுகின்றன. இதைத் தவிர சிறுபோகம் பெரும்போகம் என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட மழைக் காலத்தின் ஆரம்பம் குறித்தும் தாமதம் குறித்தும் விளக்கம் தரப்படுகின்றது. அதனால், விவசாய நடவடிக்கைகளை காலநிலைக்கேற்ப திட்டமிட்டு மேற்கொள்ள விவசாய மக்களுக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

### தரவுகள் பரிமாற்றம்

உலகம் முழுவதும் பெறப்படும் தரவுகள் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இவ்வாறு உலக நாடுகளிடையே தரவுகள் மற்றும் தகவல்கள் பரிமாற்றமானது உலக காலநிலை அமைப்பின் காலநிலை மற்றும் தேடல் வேலைத்திட்டத்தின் மூலம் முறையாகவும் செயல்திறன் மிக்கதாகவும் நடைபெறுகின்றன. தேசிய காலநிலை மத்திய நிலையத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் உலகின் ஏனைய தேசிய காலநிலை மத்திய நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன. இதனை உலக மின் தொடர்பாடல் சேவை வலைப்பின்னலே மேற்கொள்கின்றது.


இலங்கையில் பல்வேறு பிரதேச மத்திய நிலையங்களில் பெற்ற அறிக்கைகளை தொலைபேசி ஊடாகவோ வானொலி மூலமாகவோ தாமதிக்காமல் கொழும்பு தேசிய காலநிலை மத்திய நிலையத்திற்கு வழங்கும். இலங்கையில் இந்த அனைத்து தரவுகளும் தகவல்களும் 'டெலிகொம்' நிறுவனத்தின் ஊடாக 'பாதுக்க' செய்மதி மத்திய நிலையத்திற்கும் இன்டெல்செல் செய்மதிக்கும், அதன்பின் புதுடில்லியில் உள்ள வலயத் தரவுகள் திரட்டும் மத்திய நிலையத்திற்கும் அனுப்பப்படுகின்றன.

### காலநிலை விஞ்ஞானி

இயற்கை நியதியின் செயற்பாடுகளுக்கு சவாலாக இருக்கும் விடயம் குறித்து ஆய்வு செய்யும் கடப்பாடு விஞ்ஞானிகளிடம் உள்ளது. அதில் துரித கணினி தொழில்நுட்பம் முன்னணி வகிக்கின்றது. அன்றாட கடமைக்கு மேலாக வலய காலநிலை குறித்து தெரிந்து வைத்துக்கொள்ளவும்.

நிகழ்ந்த காலநிலை குறித்தும் அதன் செயற்பாடுகள் குறித்தும் மதிப்பீடு செய்யவும் வாய்ப்புண்டு. புதிய உபகரணங்களைப் பாவிப்பதும், புதிய கண்டுபிடிப்புகளுடன் கூடிய காலநிலை சம்பந்தமான எமது அறிவை நன்கு விருத்தியடையச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ப.இரஞ்சித் ஜெயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் முக்கியத்துவம்



கல்வியானது நவீன உலகில் மனிதன் கட்டாயம் கற்க வேண்டிய ஒன்றாகும். அதை எப்போது கற்க வேண்டும் என முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அதை எவ்வாறு கற்க வேண்டும் என இரண்டாவதாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதை ஏன் கற்க வேண்டும் என மூன்றாவதாக தெரிந்து கொள்ளவேண்டும்.

**கல்வியை எப்போது கற்க வேண்டுமென்றால்** நம் இனிய மாணவப் பருவத்தில்தான் கற்க வேண்டும். மாணவப் பருவமானது மாணவர்களுக்கு சாதனையை நிலைநாட்டுவதற்கு ஒரு முக்கிய பருவமாகும். நிலைநாட்டும் சாதனைகள் அவனது கல்விக்குத் துணையாக அமைகின்றன. அது கட்டுரைப் போட்டியாகவோ அல்லது பேச்சுப் போட்டியாகவோ அல்லது சிறு கதைப் போட்டியாகவோ இருக்கலாம்.

**இரண்டாவதாக அக்கல்வியை எவ்வாறு கற்க வேண்டுமென்றால்** விளையாட்டு, வீண்பேச்சு, அரட்டையடித்தல், ஆசிரியர்களுக்கு மன உளைச்சலைக் கொடுக்கும், விடயங்களைத் தவிர்த்து வகுப்பறையில் ஒழுங்கான மாணவனாகவும், பிறருக்குத் தீங்கு விளைவிக்காதவனாகவும், பொறுமையுடையவனாகவும், புத்தகங்களுக்கு மதிப்பளிப்பவனாகவும் இருந்தால் அவன் கல்வியில் வெற்றியடைவது நிச்சயம்.



**கல்வியை நாம் ஏன் கற்ற வேண்டுமென்றால்** கல்வியானது புனிதமானதாகும். அதனைக் கற்றிருந்தால் ஒரு தரமானதொழிலை பெற்றுக்கொள்ளலாம். உதாரணமாக, விஞ்ஞானப் பாடத்தில் படித்தால் சமூகத்துக்கு சேவை செய்யும் மனப்பான்மையுடைய வைத்தியராக மாறலாம். இது சிறந்த எடுத்துக் காட்டாகும். கல்வி கற்பதால் நாம் சோதனைகளுக்கு முகங்கொடுக்கும்போது வெற்றிகரமாக அதனை முறியடித்து சாதனைகளை நிலைநாட்ட முடியும்.

சப்னா சம்ஸ், கா/ஸாஹிரா தேசிய பாட., கிந்தோட்டை.

## யார் திருடன்?

**அக்பர் பேரரசின் பிரதான மந்திரிகளுள் மிகவும் புத்திக்கூர்மை உள்ளவர் பீர்பால். ஒரு சமயம் பீர்பால் சந்தைப் பக்கமாகப் போயிருந்தபோது ஒரு வணிகர் அவரை அணுகி, "ஐயா, என் கடையில் திருட்டு நடந்திருக்கிறது.**



**எனக்கு என் வேலையாட்கள் மீது தான் சந்தேகம். ஆனால், யார் செய்திருப்பார் என்றுதான் தெரியவில்லை" என்றார்.**

**பீர்பால் வேலையாட்கள் எல்லோரையும் அழைத்து ஒவ்வொருவரிடமும் ஒரே அளவிலான குச்சி ஒன்றைக் கொடுத்து, "தம்பிகளா! இது ஒரு மந்திரக்குச்சி. திருடனிடம் இருக்கும் குச்சி நாளைக்குள் ஒருபடி அளவு வளர்ந்துவிடும். ஜாக்கிரதை! நாளைகாலை சந்திப்போம்" என்று கூறிவிட்டுச் சென்றார்.**

**மறுநாள் அவர் வந்தபோது ஒரு வேலைக்காரனின் குச்சி மட்டும் ஒரு படி அளவு குறைந்திருந்தது. பீர்பால் உடனே, "என்ன தம்பி உன் குச்சி ஒரு படி வளர்ந்து விடும் என்ற நினைப்பில் வெட்டினாயாக்கும்" என்று கூறியவாறு வணிகரைப் பார்த்து, "ஐயா! இதோ உங்கள் திருட்டு வேலைக்காரன்" எனக் காட்டினார். பீர்பாலின் அறிவுக்கூர்மையை அறிந்து வியந்த வணிகர் அவரைப் பாராட்டியதுடன் திருட்டு வேலைக்காரனையும் அன்றே வேலையிலிருந்து நீக்கினார்.**

எம்.எஃப்.சப்றான்,
தி/அல்ஹம்றா ம.வித்., தோப்பூர்.




## மூத்தோர் மொழிந்தவை

- பணமும், புகழும் உண்மையான செல்வம் அல்ல. ஒழுக்கமே உண்மையான செல்வம்.
  *ஜேம்ஸ் ஆலன்*
- அறிவை விட தைரியத்தினால் தான் பெரிய காரியங்கள் சாதிக்கப்படுகின்றன.
  *ஜேர்மன்*
- சிறிய மெழுகுவர்த்தி எவ்வளவுதூரம் ஒளியைப் பரப்புகின்றதோ அதேபோல் கெட்ட உலகத்திலே ஒரு நல்ல செயல் நன்கு பிரகாசிக்கும்.
  *ஷேக்ஸ்பியர்*
- அறிவாளியின் கரங்களிலுள்ள எழுதுகோலானது போர் வீரனின் வீரவாளை விட மிகப் புனிதமானது.
  *நபிகள் நாயகம்*
- மனிதர்களிடம் நல்லெண்ணம் நிலவுகின்றபோது இப்பூமியில் அமைதியும், சமாதானமும் இருக்கும்.
  *இயேசு பிரான்*
- மாற்றம் இல்லாமல் முன்னேற்றம் ஏற்பட முடியாது. இதற்கு இயலாதவர்களால் எதையும் செய்ய முடியாது.
  *ஜோர்ஜ்பெர்னாட்ஷா*
- வாழ்க்கையில் உண்மையாகவே வெற்றி பெறவேண்டுமாயின், அதற்காக சுருக்கமாகப் பேசுங்கள் நிறைய செயலாற்றுங்கள்.
  *சுவாமி சிவானந்தர்*

தொகுப்பு:
ஏ.எச்.எஸ்.ரினோஸா,
ப/சேர் ராசிக் பரீட் ம.வித்.,
பண்டாரவளை.

## உண்மை கசக்கும்

ஒரு காட்டில் வாழும் மிருகங்களுக்கு இடையில் ஒருநாள் யார் அழகானவர் என்ற போட்டி வந்தது. மற்றொரு நாள் தமது அழகை நிரூபிக்க கண்ணாடி ஒன்று தேவை என்று இவை யோசித்தன. அனைத்துப் பறவைகளும் கண்ணாடி தேடிப் பல திசைகளிலும் சென்றன. அப்போது ஆந்தைக்கு முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்று கிடைத்தது. அக்கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்த ஆந்தைக்கு கோபம் கோபமாக வந்தது. "சே! என்ன இது இந்தக் கண்ணாடி என் முகத்தை அவலட்சணமாகக் காட்டுகிறது" என்று கோபமாக கத்தியது.



பின்னர் அந்தக் கண்ணாடியை ஆத்திரத்துடன் உடைத்துக் கொண்டிருந்தது. இதைப் பார்த்த குரங்கு ஒன்று "ஏன் இப்படிச் செய்கிறாய்?" என்று ஆந்தையிடம் கேட்டது.

"இந்தக் கண்ணாடி என் முகத்தை அவலட்சணமாகக் காட்டுகிறது. அதனால்தான் இதனை உடைக்கிறேன். இந்தக் கண்ணாடி இல்லாதபோது நான் ரெம்ப அழகாக இருந்திருக்கிறேன் தெரியுமா?" என்றது. குரங்கு அதற்குப் பதில் சொல்லாமல் தன் வழியில் சென்றது.

"உண்மை சிலருக்கு கசப்பாகத்தான் இருக்கும்"

ஜே.ஜசோதினி,
மு/உடையார்கட்டு ம.வித்.,
முல்லைத்தீவு.



## ஆசைமிகு அம்மா...!

பத்து மாதம் சுமந்து பெற்று
பல துன்பங்கள் தான் பட்டு
பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டி
பாசத்துடன் வளர்த்த அம்மா

பொறுமை எனும் நகையணிந்து
பெருமையுடன் எமைப் பெற்று
பொறாமைக் குணம் நீக்கி
பொக்கிஷமாய் எமை வளர்த்த அம்மா

அவனியிலே அன்புக்கு ஆதாரமாய்
அகிலத்தில் உதித்த உத்தமியாய்
அன்புக் குழந்தைக்காய்
அயராது உழைப்பவள் அம்மா.

எஸ்.எப்.ஷிபானா,
அறக்கியாள முஸ்லிம் ம.வித்.,
சியம்பலாகஸ்கொடுவ.



## விஜய் மாணவர் கழகம்

படத்தை இங்கே ஒட்டவும்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..................................

முகவரி:..................................

..................................

பாடசாலை:..................................

வகுப்பு:..................................

அனுப்ப வேண்டிய முகவரி :
"விஜய்"
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவப்புத்தலைக் கரடியின் அச்சுறுத்தல்



உலகில் நடந்த, நடந்து கொண்டிருக்கும் அரிய விஷயங்களை உடனுக்குடன் வெளியிடும் 'டிஸ்கவர்' என்ற பத்திரிகையில் உயிரியல் துறையில் டொக்டர் பட்டம் பெற்ற ஏப்ரலி பொஸ்ஸோ என்பவர், அந்தாட்டிக்காவில் காணப்படும் அரியவகை பனிக்கரடியைப் பற்றி சமீபத்தில் எழுதியிருக்கும் கட்டுரை உலக அளவில் உயிரியல் அறிஞர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது.

அதாவது அந்தாட்டிக்காவிலுள்ள பனிக்கரடியின் தலை செக்கச் செவேலென்று சிவந்திருக்குமாம். பனிப் பொழிவைத் தாங்குவதற்காகத்தான் இயற்கையிலேயே இப்படியொரு அமைப்பை இந்தக் கரடிகள் பெற்றிருக்கின்றதாம்.

இவை தங்களின் தலைப் பகுதியிலிருந்து வெளிப்படும் வெப்பத்தின் மூலம் பனியை உருக வைத்து நுண்ணுயிர்களையும் பென்குயின்களையும் உண்கின்றனவாம். இந்த நிலையில் சிவப்புத்தலைக் கரடிகளின் எண்ணிக்கை பெருகினால் அங்கு பென்குயின் இனம் அழியும் ஆபத்து ஏற்படும். பென்குயின்களை காக்க முற்பட்டால் சிவப்புத்தலைக் கரடிகளை அழிக்க வேண்டியேற்படும்.

எனவே, இவற்றில் எந்த இனத்தைக் காப்பது.....? பென்குயின்களையா? சிவப்புத்தலைக் கரடிகளையா? உயிரியல் அறிஞர்கள் இதற்கு தீர்வை காணமுடியாமல் தடுமாற்றத்துடன் உள்ளனராம்.


**8 ம் ஆண்டு முதல் A/L வரை கல்வி கற்கும் மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தில் திறமை சித்திகளை பெற உதவும் தமிழ் மூல விளக்கத்துடனான ஆங்கில கற்கை பொதி.**

## English Home Study Pack ஆங்கில கற்கை பொதி

**சரளமாக ஆங்கிலத்தில் எழுத பேச வாசிக்க 45 நாட்களில் வீட்டிலிருந்தவாரே பயிற்சி பெறுங்கள்.**

### Home Study Pack ஒன்றில் அடங்குபவை .....?

- ☆ ஆங்கில பேச்சு பயிற்சி புத்தகங்கள் (ஆங்கில பேச்சு பயிற்சி, இலக்கணம், கவிதைகள் குறுக்கெழுத்து போட்டி, கடிதம் எழுதுதல், சிறுகதைகள், கட்டுரைகள் உள்ளடக்கிய புத்தகம்)
- ☆ **Spoken English** - Video cd
- ☆ **English- Tamil Dictionary** (இந்தியாவில் இருந்து விசேடமாக தருவிக்கப்பட்டது
- ☆ **English Talking Guide** - Audio cd
- ☆ **Spoken english- & Grammar** புத்தகம். (இந்தியாவில் இருந்து விசேடமாக தருவிக்கப்பட்டது
- ☆ **Jei Logo Printed Bag,** விசேடமாக தயாரிக்கப்பட்ட Bag

15 பாடப் புத்தகங்களிலும் காணப்படும் பயிற்சிகளுக்கு விடைகளை எழுதி அனுப்பவும். பிழை திருத்தி அனுப்பி வைக்கப்படும்.



**நேரடி விநியோகம்-**
Colombo - Kandy- Matale Kegalle - Kurunegala - Gampaha - Kalutara - மாவட்டங்களில் இருந்து விண்ணப்பிக்கும் மாணவர்களின் Study Pack வீட்டுக்கே கொண்டு வந்து தரப்படும்.

### Home Study Pack ஒன்றை பெறுவது எப்படி ?

நீங்கள் STUDY PACK ஐ பெற விரும்பின் VJY என TYPE செய்து உங்கள் Name ,Address, T.p.no, Age
**0777-806 606 SMS** செய்யுங்கள்.

அல்லது T.p. மூலம் அழையுங்கள்.

**Post Card** இல் எழுதி அனுப்புங்கள்.

**Study Pack** அருகே இருக்கும் தபால் கந்தோருக்கு அனுப்பப்படும்.பின்னர் ரு 1900/- செலுத்தி பெறலாம்

**அல்லது**

ரு 1700/- வங்கி ஒன்றில் *Romzan, Director Jei* என்ற பெயருக்கு வைப்பு செய்து வங்கி கிளையையும் வைப்பு செய்த நேரத்தையும். அறிவியுங்கள் .
**Study Pack** எமது முகவர் மூலம் உங்கள் வீட்டுக்கே அனுப்பப்படும்.

Commercial - 80-400-52-644
HNB - 4157-3850-2904-0001
Sampath - 1007-5019-9539
A/c.Holder.Mr. Ramzan Director Jei

### யாருக்காக...?


- ☆ வெளிநாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு
- ☆ தொழில் வாய்ப்புகளை தேடுவோருக்கு
- ☆ தொழில் புரிவோருக்கு
- ☆ இல்லத்தரசிகளுக்கு

**மாணவர்களுக்கு விசேட விலை கழிவு**

8 ம் ஆண்டுக்கு மேல் கல்வி பயிலும் மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும்.பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் விசேட விலை கழிவு ரு 1700/-மட்டுமே. English Home study Pack பெற SMS செய்யும் போது பாடசாலையின் பெயரையும கல்வி கற்கும் வகுப்பையும் கட்டாயமாக குறிப்பிடவும்

பாடநெறி முடிவில்
**DiP In English-L 1**
**DiP In English-L 2**
இரு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Jei மூலம் வழங்கப்படும் சான்றிதழானது உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் தொழில் வாய்ப்புகளை பெற உதவும்.



**STUDENT IDENTITY CARD- மாணவர் அடையாள அட்டை**

ஆங்கில பாடநெறியை தொடரும் மாணவர்களுக்கு அடையாள அட்டை இலவசமாக வழங்கப்படும்.
நீங்கள் *Study Pack* ஐ பெற்றதும் அதன் உள்ளே காணப்படும் பதிவு இலக்கத்தை குறிப்பிட்டு *passport size* இரு புகைப்படங்களை இணைத்து அனுப்புங்கள்.
( அடையாள அட்டை பெறுவது கட்டாயம் இல்லை )

**JEI INSTITUTE**
**P.O.BOX.119 KANDY. 0814-92 91 93**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கெசினி ஹியுஜென்ஸ் சனிக்கிரக பயணம்

நாஸா மற்றும் ஐரோப்பிய விண்வெளி ஆய்வு ஏஜன்சியுடன் இணைந்து விண்வெளிக்கு அனுப்பப்பட்ட கெசினி ஹியுஜென்ஸ் விண்வெளி ஓடமானது, 2004 ஜூன் 30 ஆம் திகதி சனிக்கிரக சுற்றுப்பாதையில் நுழைந்தது. பின்னர் ஹியுஜென்ஸ் டைட்டன் சந்திரனின் மேற்பரப்பில் இயந்திரப் பொறியொன்றைத் தரையிறக்கித் தேடுதல் சாதனை புரிந்தது.

### கெசினி விண்வெளி ஓடம்

#### இலக்கை நெருங்குதல்

நீண்ட காலமாக பயணிப்பதற்கேற்றதான ஒத்துழைப்பைப் பெற்றது.





4 வருடங்களாக சனிக் கிரகத்தின் அருகில் ஆய்வுப் பணிகளில் ஈடுபட்ட 'கெசினி' விண்வெளி ஓடமானது சனிக்கிரகத்தின் 31 உபகோள்கள் குறித்த தேடுதலில் ஈடுபட்டது. 17 ஆம் நூற்றாண்டில் சனிக்கிரகத்தின் பிரதான 5 உபகோள் களையும் வளை யத்தையும் கண்டுபிடித்த விண்வெளி ஆய்வாளர்கள் இருவரைக் கௌரவிக்கும் பொருட்டு இவ் ஆய்வுப் பணிக்கு அவர்களின் பெயர் சூட்டப்பட்டது.



### டைட்டன் மேற்பரப்பில் ஹியுஜென்ஸின் செயற்பாடுகள்

2004 டிசம்பர் 25 ஆம் திகதி டைட்டன் உபகோளின் மேற்பரப்பில் ஹியுஜென்ஸ் 21 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆய்வுப் பணிக்காகத் தரையிறக்கப்பட்டது.




#### ஹியுஜென்ஸ்ஸின் ஆய்வுப்பணி

- வளியிலுள்ள மின் அதிர்வுகளை அளத்தல்.
- கீழ்நோக்கி இறங்கும்போது வளி அமுக்கத்தை அவதானித்தல்.
- டைட்டன் உபகோள் தொடர்பிலான கண்காணிப்பும் கதிர்வீச்சு அளத்தலும்
- வளியிலுள்ள இரசாயனம்
- வளியிலுள்ள காபனீரொட்சைட்டை அவதானித்தல்.
- டைட்டன் மேற்பரப்பின் பௌதீகத் தன்மைகளை ஆராய்தல்.

REUTERS

# சனிக்கிரகத்தில் ஆ[...] தொடங்கியுள்ள [...]


"இப் பிரபஞ்சத்தில் நாம் ஒருபோதும் தனிமையாக்கப்படவில்லை" என்பது அண்மையில் எம்மை விட்டுப் பிரிந்த விஞ்ஞானி ஆத்தர் சி.க்ளார்க் அவர்கள் எந்நேரமும் கூறிக்கொண்டிருந்த ஒரு கருத்தாகும். முன்னொரு காலத்தில் 'பறக்கும் தட்டுக்கள்' சஞ்சரிப்பதாக நம்பிய மனிதன், வேற்றுக்கிரக வாசிகள்தான் இந்த பறக்கும் தட்டுக்களில் வந்து செல்வதாகக் கருதினான்.

இதனால்தான் இப்பிரபஞ்சத்தின் வேறு இடங்களில் உயிரினங்கள் வாழ்கின்றனவா? என்பது குறித்து விண்வெளி ஆய்வாளர்களுக்கு சந்தேகங்கள் எழலாயின. இது குறித்து அவர்கள் மிகுந்த அவதானத்துடன் இருப்பதோடு அன்றிலிருந்து தீவிர ஆய்வுப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். தமது ஆய்வுப் பணிகளை மேலும் விஸ்திரப்படுத்தும் நோக்கில் செவ்வாய், சனி என்று கிரகங்கள் நோக்கிய ஆய்வுப்பயணம் தொடரப்பட்டன. செவ்வாய் குறித்த ஆய்வுகளை நடத்த 'ஸ்பிரிட்' அனுப்பப்பட்டதோடு சூரியனிலிருந்து 1426.7 கிலோமீற்றர் தொலைவிலுள்ள சனிக்கிரகத்தில் ஆய்வுப்பணிகளை நடாத்த 'கெசினி ஹியுஜென்ஸ்' எனும் விண்வெளி ஓடத்தையும் அனுப்பி வைத்தனர்.

இந்த விண்கலம் சனிக்கிரகத்தின் சுற்றுப்பாதையினுள் நுழைவதற்கு 7 வருடங்கள் அதாவது 2555 தினங்கள் எடுத்தன. அத்துடன் நில்லாது தொடர்ந்து 'கெசினி ஹியுஜென்ஸ்' கலமானது மேலும் 4 வருடங்களாக (2004 முதல் 2008 வரை) சனிக்கிரகத்தின் உபகோள்களைப் பற்றிய ஆய்வுகளையும் தொடர்ந்த நிலையில் அதன் சுற்றுப்பாதையில் பயணித்து வருகின்றது.

பயணத்தின் நோக்கம் மற்றும் செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடுவதை விட விண்கலம் குறித்த திட்டமிடல் பணிகள் குறித்தே அதிக கவனம் செலுத்தப்பட்டது. அதற்காக சர்வதேச மட்டத்திலான விஞ்ஞானிகளின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டது. விண்வெளி ஓடத்தை இரு பிரிவுகளாகப் பிரித்து அதில் 'ஹியுஜென்ஸ்' எனப் பெயரிடப்பட்ட இயந்திரப் பொறியானது, உபகோள்கள் தொடர்பான ஆய்வுப் பணிகளைச் செய்வதாகத் திட்டமிடப்பட்டது.

செயற்பாட்டு நடவடிக்கைகளின் போது ஓடத்தை சரியான முறையில் வழிநடத்துவதற்காக 'கெசினி செயற்திட்டம்' என்ற பெயரில் பூமியிலிருந்து நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளத்தக்க வகையிலான கணினி மற்றும் கணினி மென்பொருள் கட்டமைப்பு மற்றும் 'கெசினி' விண்வெளி ஓடத்துடன் சம்பந்தப்பட்ட விஞ்ஞானிகள் குழுவொன்றையும் உள்ளடக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ய்வுப் பணிகளைத் 'கெசினி'

யதாக புவி கூட்டமைப்பொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இவ் ஆய்வுப் பயணத்தின்போது 'கெசினி' ஓடமானது சனிக்கிரகத்தை 74 முறை சுற்றிவரத் திட்டமிடப்பட்டுள்ளது. அதில் 44 ஆவது சுற்றில் டைட்டன் (Titan) சந்திரனை அண்மித்துப் பயணிக்கும். அவ் அரிய சந்தர்ப்பத்தில் எடுக்கப்படும் நிழற்படங்கள் மற்றும் தகவல்கள் 'ரேடார்' அலைகளினூடாக புவியில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.


சனிக்கிரகத்தின் மிகப்பெரிய உபகோளாகக் கருதப்படும் 'டைட்டன்' இன் மேற்பரப்பில் மணல் மலை, அதன் கீழ் 60 மைல் ஆழத்தில் பாய்ந்தோடும் நிலக்கீழ் நதிகள் என்பன இருக்குமென விஞ்ஞானிகள் எதிர்வு கூறுகின்றனர். விஞ்ஞானிகளின் அனுமானிப்பின்படி, இந்த ஆற்று நீரில் ஹைட்ரஜன் அணுக்கள் 2உம், ஓர் ஒக்சிஜன் அணுவும் இருக்குமாயின் டைட்டனில் உயிரினங்கள் வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அல்லது சில மில்லியன் வருடங்களுக்கு முன் அங்கு உயிரினங்கள் வா[illegible]இருக்கலாம் என்றும் கூறப்படுகின்றது.

[illegible]லும், "டைட்டனின் மேற்பரப்பில் நிலக்கீழ் சமுத்திரம் இருப்பது உறுதிப்படுத்தப்படுமானால் அங்கு உயிரினங்களும் நீரும் நிச்சயம் இருக்கவேண்டும்" என 'நெண்டிஸ்' பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். கெசினியூடாக அனுப்பப்பட்டுள்ள 'ரேடார்' சமிக்ஞைகளை ஆய்வு செய்ததன் பின்னே இத்தகைய முடிவிற்கு அவர்கள் வந்துள்ளனர்.

டைட்டன் சந்திரனில் இருக்குமெனக் கூறப்படும் நிலக் கீழ் சமுத்திரமானது 'அமோனியா' கலந்த தடிப்பான பனிப்படலத்தால் மூடப்பட்டிருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதேவேளை, சனிக்கிரகத்தின் உபகோள்களில் 6 ஆவது இடத்தை வகிக்கும் 'என்செலாடஸ்' இலும் ஹைட்ரஜன் மற்றும் ஒக்சிஜன் வாயுக்கள் நிறைந்து காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. இக்கருத்து உறுதிப்படுத்தப்படுமாயின் அங்கும் உயிரினங்கள் இருக்கின்றனவா என்ற தொடர்பிலான ஆய்வுகள் நடாத்தப்படலாம்.

'ந[illegible]ா' நிறுவனத்தால் அனுப்பப்பட்ட இவ் ஆய்வு ஓடத்தின் மூலம் அனுப்பப்படும் தகவல்களின்படி 'என்செலாடஸ்' சந்திரனில் ஹைட்ரோகாபன் உண்டு என்பது ஏலவே தெரியவந்துள்ளது. குறிப்பாக, அங்கு மெதேன் வாயு இருப்பதானது விஞ்ஞானிகளைப் பெரும் ஆச்சரியத்துக்குள்ளாக் கியுள்ளது.



## சனிக்கிரகத்தின் 'என்செலாடஸ்' சந்திரன்

சனிக்கிரகத்தின் 'என்செலாடஸ்' சந்திரனில் அதிகளவு நீராவிக் குமிழ்கள் உள்ளன. ஆகவே, .இதன் மூலம் அறியக்கிடைக்கும் விடயமானது, அதன் மேற்பரப்பிலுள்ள தடிப்பான பனிப்படலம் அல்லது ஐஸ் தட்டுகளின் கீழே திரவநிலையிலான சமுத்திரம் ஒன்றிருக்கலாம் என்றும் விஞ்ஞானக் கோட்பாட்டின்படி அங்கு உயிர்களின் ஆரம்பநிலை தோன்றியிருக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

'நாஸா', ஐரோப்பிய விண்வெளி ஏஜன்சியுடன் இணைந்து சனிக்கிரக ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அனுப்பிய 'கெசினி' விண்கலத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற நிழற்படங்களை அவதானித்ததன் பின்னரே இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

### என்செலாடஸ்

- 1789 இல் வில்லியம் ஹர்ஷல் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.
- ஒக்சிஜன் மற்றும் ஹைட்ரஜன் என்பன நிறைந்து காணப்படுகின்றன.
- நீராவி, நீர்நிலை, மெதேன் மற்றும் காபனிரொட்சைட் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன.



### மேற்பரப்பில் அவதானிப்பு

கெசினி அனுப்பியுள்ள நிழற்படங்களை அவதானித்த விஞ்ஞானிகளின் கருத்தின் படி, 273 பாகை செல்வினுக்கும் அதிகமான வெப்பநிலை அமுத்தத்திற்கு இலக்காகிய திரவமானது இடைக்கிடை வான்நோக்கிப் பாய்வதாகக் கூறப்படுகின்றது.




### சனிக்கிரகத்தின் சில சந்திரன்கள் (உபகோள்கள்)




சனிக்கிரகத்திற்கு 47 உபகோள்கள் உள்ளன.

### சனிக்கிரகத்தின் வளையம்

- பனிக்கட்டி மற்றும் பாறைப்படலங்களால் உருவாகியது
- 3 இலட்சம் கி.மீற்றர் தூரம் கொண்ட 8 வளையங்கள்
- 100 மீற்றர் முதல் 30,000 கி.மீற்றர் வரை தடிப்பானது



### கெசினி விண்வெளி ஓடம்

2004 ஜூன் 30 ஆம் திகதி சனிக்கிரக சுற்றுப்பாதையில் நுழைந்தது. 4 வருடங்களாக சனிக்கிரகம் சம்பந் தமான ஆய்வில் ஈடுபடுகின்றது.




REUTERS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆர்ஜன்டீனா

| | |
|---|---|
| அழைக்கப்படும் பெயர்: | ஆர்ஜன்டீனா குடியரசு |
| கண்டம்: | தென் அமெரிக்கா |
| வலயம்: | தென் வலயம் |
| எல்லை: | வடக்கே பொலீவியாவையும் பராகுவேயையும் வடகிழக்கே பிரேசிலையும் உருகுவேயையும் கிழக்கே அட்லாண்டிக் சமுத்திரத்தையும் மேற்கே சிலி நாட்டையும் தெற்கே பசுபிக் சமுத்திரத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. |




## தரைத்தோற்றவியல்

ஆர்ஜன்டீனாவானது 2,780,400 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்ட ஒரு நாடாகும். பரந்த நிலப்பரப்புடனான இந் நாட்டுக்கருகில் பல சிறிய தீவுகளையும் காணலாம். 4,989 கிலோ மீற்றர் நீளமான நீண்ட கடற்கரைப் பிரதேசத்தை ஆர்ஜன்டீனா கொண்டுள்ளது. இதற்கருகிலுள்ள ஃபோக்லண்ட் தீவானது தங்களுக்குச் சொந்தமானது என ஆர்ஜன்டீனா பிரகடனப்படுத்திய போதும் அத்தீவானது இன்று வரை பிரித்தானியாவின் ஆட்சிக்குக் கீழேயே இருந்து கொண்டிருக்கின்றது.




அந்தீஸ் மலையானது, தென் அமெரிக்காவின் பிரதான மலைத் தொடராக இருக்கும் அதேவேளை, அது ஆர்ஜன்டீனாவின் மேற்கு எல்லையிலேயே அமைந்துள்ளது. நாட்டின் வட பகுதியில் 6,400 மீற்றரிலும் உயரமான மலைத்தொடர்கள் அதிகம் காணப்படுகின்றன. அந்தீஸ் மலைத் தொடர் வலயத்தில் சமாந்தரமான மலைத் தொடர்கள் பல அமையப்பெற்றுள்ளன. இது இவ்வலயத்திற்கேயுரிய தனிச் சிறப்பெனக் கொள்ளலாம். நாட்டின் வட பகுதியிலும் கிழக்கு அந்தீஸ் மலைச் சாரலிலும் சாதாரண புல்வெளிகளும் சவன்னா புல்வெளிகளும் பரந்து காணப்படுகின்றன. அவ்வாறே இடைவெப்பக் காடுகளையும் இங்கு காணலாம்.



உலகின் புகழ்பெற்ற புல்வெளிகளில் ஒன்றான 'பம்பாஸ்' புல்வெளியும் இவ்வலயத்திலேயே உள்ளது. இது தலைநகர் புவனர்ஸ் அயர்ஸ் நகருக்கு மேற்கில் அமைந்துள்ளது. அதிக சனத்தொகை வாழும் பிரதேசமாகவும் அதிகளவில் விவசாயம் மேற்கொள்ளப்படும் பிரதேசமாகவும் வட பகுதியைக் குறிப்பிடலாம்.

## ஆறுகளும் ஏரிகளும்

அதிகமான ஆறுகள் அந்தீஸ் மலையில் உற்பத்தியாகி அட்லாண்டிக் சமுத்திரத்தில் சங்கமிக்கின்றன. பரானா, பராகுவே, உருகுவே போன்றவை ஆர்ஜன்டீனாவின் பிரதான நதிகளாக இனங்காணப்பட்டுள்ளன.

'இகுவாகு' என்பது இந்நதிகளில் இருந்து உருவான பிரதான நீர்வீழ்ச்சியாகும். இவை தவிர, ரியோ கொலராடோ, ரியோ செலெண்டோ, ரியோ நெக்ரோ முதலியன நாட்டின் பிரதான நதிகளாக இருப்பதோடு தென்பகுதியில் ஏரிகள் பலவும் காணப்படுகின்றன.





## காலநிலை


தலைநகர் புவனர்ஸ் அயர்ஸ் நகருக்கு அண்மையில் 20° முதல் 30° செல்சியஸ் வரையிலான வெப்பநிலை நிலவுகின்றது. ஜனவரி மாதம் அதிக வெப்பம் நிலவும் மாதமாக இருப்பதோடு ஜூலை மாதமோ குறைந்த வெப்பம் நிலவும் மாதமாகக் காணப்படுகின்றது.

மழைவீழ்ச்சியானது தரைத்தோற்ற வேறுபாடுகளுக்கமைய பிரதேசத்திற்குப் பிரதேசம் மாறுபடுகின்றது. வட ஆர்ஜன்டீனாவின் சிலபகுதிகளில் வருடாந்த மழைவீழ்ச்சி 1520 மில்லிமீற்றர் ஆகும்.

## தாவரமும் விலங்குகளும்

நாட்டின் முக்கிய வளம் நிறைந்த பிரதேசமாக பம்பாஸ் பிரதேசம் விளங்குகின்றது. இவ்வலயத்தில் கனிப்பொருள் வளமும் பெறுமதி வாய்ந்த மரங்களும் நிறைந்து காணப்படுகின்றன. வடகிழக்குப் பகுதியில் நீர் ஆவியாகும் தன்மை அதிகம் காணப்படுவதால் வெப்ப வலய தாவர வகைகளையும் வித்தியாசமான புல் வகைகளையும் இங்கு காணலாம். யூக்கலிப்டஸ், சைகமோ, அக்காசியா போன்ற மரங்களும் மூலிகை மரங்களையும் அதிகளவில் காணலாம்.





நாட்டின் வட பகுதியில் குரங்கு, மான், டாபிர் போன்ற மிருகங்கள் அதிகமாக இருக்கின்றன. அதேபோல் பல்வேறுபட்ட பறவை இனங்களின் புகலிடமாகவும் இப்பிரதேசம் திகழ்கின்றது.

## சனத்தொகை

இங்குள்ள சனத்தொகையில் 85% மானோர் ஐரோப்பிய வம்சாவளியினராவர். குடியேற்றங்களால் கலப்பினத்தவர்களின் தொகை அதிகரித்து வருகின்றது. ஸ்பானிய, இத்தாலிய இனத்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட நாடாக ஆர்ஜன்டீனா விளங்குகின்றது. இவர்களைத் தவிர, பிரான்சியர், பிரித்தானியர் மற்றும் ஜேர்மனியரும் அதிகளவில் வாழ்கின்றனர்.

## மொழியும் மதமும்

அரச மொழியாக ஸ்பானியம் விளங்குகின்றது. இது தவிர, லுன்பார்டோ எனும் ஸ்பானிய - இத்தாலிய கலப்பு மொழியொன்றும் இங்கு பாவனையில் உள்ளது. மேலும், ஆங்கிலம், இத்தாலி, கொரிய மொழிகளும் பேசப்படுகின்றன. நாட்டின் மொத்த சனத்தொகையில் 91% மானோர் ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களோடு யூதர்களும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களும் சிறுபான்மையினத்தவராய் இருக்கின்றனர். எந்தவொரு மதத்தையும் பின்பற்றாதவர்களும் சிறியளவில் வாழ்ந்து வருகின்றனர்.

(மிகுதி அடுத்த இதழில்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறவைகளின் புலன் சக்திகள்

இந்த உலகிலுள்ள எல்லா ஜீவராசிகளும் தாம் வாழ்கின்ற சூழலைப் புரிந்து கொள்வதற்கும்-உணர்வதற்கும் கண், காது, மூக்கு, நாவு ஆகியனவே முக்கிய உபகாரமாக உள்ளன. இதன்படி அவை கண்களினால்-பார்த்தல், காதுகளினால்-கேட்டல், மூக்கினால்-நுகர்தல், வாயினால்-சுவைத்தல், உடலினால்-ஸ்பரிசத்தையும் உணர்கின்றன. இவற்றின் உபகாரம் இல்லாது ஜீவராசிகளினால் முழுமையான ஒரு வாழ்க்கையை வாழ்ந்து விட முடியாது. ஏனைய உயிரினங்களைப் போலவே பறவைகளுக்கும் இதேவகை புலன்கள் இருக்கவே செய்கின்றன. பறவைகளும் கூட தாம் வாழ்கின்ற சுற்றுச் சூழலிலுள்ள நிலைவரத்தை உணர்ந்து கொள்வதற்கு இந்தப் புலன்கள் பெரும் உதவியாகவே அமைகின்றன.

மனிதனைப் பொறுத்தவரையில் புலன்களில் கண்களே முக்கிய பங்கினை வகிக்கின்றன. அவ்வாறே பறவைகளுக்கும் கண்களே முக்கிய பங்கினை வகிக்கின்றன. இதேவேளை, பறவைகளுக்கு உள்ள பார்வைத் தெளிவைப் போன்று வேறெந்த உயிரினத்திற்கும் கிடையாது என்றும் கண்டறியப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு வானத்தில் மிக உயரத்தில் பறந்து கொண்டிருக்கின்ற பருந்து தரையிலுள்ள தனது இரையை மிக இலகுவாக அடையாளம் கண்டு கொள்வதைக் குறிப்பிடலாம். அந்தளவிற்கு அதன் பார்வைத் திறன் கூர்மையாக இருப்பதையே இது காட்டுகின்றது.

பொதுவாக பறவைகளின் கண்களைப் பார்க்கையில் நமக்குச் சிறியதாகவேஅவை தோன்றுவதுண்டு. ஆனால், எமக்கு வெளித்தோற்றத்திற்கு தோன்றுவதை வைத்து அப்படியான தீர்மானத்திற்கு வருவது சரியல்ல. பறவைகளின் வெளித்தோற்றத்தில் நமக்குத் தெரிவது கண்களில் ஒரு பகுதியாகும். மிகுதியான பெருமளவு பகுதிகள் அவற்றின் தசைப் பகுதிக்குள் பொதிந்துள்ளன. குறிப்பாக, அவற்றின் மூளையின் அளவை விட கண்களின் அளவு பெரிதாகும்.



### கண்களின் விசேடம்

அநேகமான பறவைகளின் கண்கள் அவற்றின் தலையின் இருபுறங்களிலேயே காணப்படுகின்றன. இவ்வாறு அமையப் பெற்றுள்ளமையால் தலையினை ஒரே திசையில் வைத்துக் கொண்டு சமகாலத்தில் ஒரே கோணத்தில் எதனையும் அவற்றால் பார்க்க முடியாது. ஆனால், கழுகு, ஆந்தை போன்றவற்றிற்கு தலையின் முன்புறமே இரண்டு கண்களும் அமையப் பெற்றுள்ளதோடு அவற்றால் ஒரே திசையில் இரண்டு கண்களின் பார்வையையும் செலுத்தக் கூடியதாக உள்ளமையால் அது அவற்றிற்கு மேலதிக அனுகூலமாகவே கருதப்படுகின்றது.


### கண்களைத் தனித்தனியாக சுழற்றும் வசதி

பறவைகளின் கண்களில் காணக்கூடிய மற்றுமொரு விசேட அம்சம் அவற்றின் ஒவ்வொரு கண்ணையும் இருவேறு திசைக்கு சுழற்ற முடிவதுடன், அவ்வாறே ஒரு கண்ணை அசைக்காமல் மற்றொரு கண்ணை மட்டும் அசைக்கக்கூடிய வல்லமையையும் பெற்றுள்ளமையாகும். இதனால், இருவேறு அம்சங்களைப் பார்க்க முடியும்.

பறவைகள் எதனையாவது கண்களினால் உற்று நோக்கும் போது கண்களின் விரிவடைதல் அதிகரிப்பதுண்டு.

இதன்படி, கழுகு, பருந்து ஆகியவற்றின் கண்களானது இப்படியான சந்தர்ப்பங்களில் மனிதர்களின் கண்களை விட ஐந்து மடங்கு அதிகமாக விரிவடைகின்றதெனவும் கண்டறியப்பட்டுள்ளது.





### வேறு புலன் சக்திகள்

கண்களுக்கு அடுத்தபடியாக பறவைகளுக்கு காதுதான் முக்கிய புலன் உறுப்பாக உள்ளது. ஆந்தை போன்ற பறவைகளுக்கு கேட்கும் திறன் அதிகமாக இருப்பதனால்தான் அவை இரவு நேரங்களிலும் இலகுவாக இரை தேடிக் கொள்கின்றன.

சுவைத்தல், நுகர்தல், ஸ்பரிசம் ஆகியன மனிதனுக்கு முக்கியத்துவம் மிக்கதாய் உள்ள போதிலும், பறவைகளுக்கு அவற்றில் பெரிதாக பயன் ஏதும் கிடையாது. எந்தவொரு இரை கிடைத்தாலும் அவற்றின் சுவை பார்க்காமல் அப்படியே விழுங்கி விடுவதே அவற்றின் இயல்பாகும்.

அதாவது இவற்றின் சுவை உணர்வுத் தன்மையானது வாயின் உட்தொண்டைப் பகுதியிலேயே காணப்படுகின்றது. எனவேதான், பறவைகளுக்கு சுவை உணர்ச்சி மிகக் குறைவாகவே இருப்பதாகக் கருதப்படுகின்றது.

மேலும், பெரும்பாலான பறவைகளுக்கு வாசம், நாற்றம் இரண்டையும் உணரும் தன்மையும் கிடையாது. பறவைகளுக்கு உணர்ச்சித் தன்மையானது உடம்பில் இடத்திற்கிடமே காணப்படுகின்றன.

குறிப்பாக சிறகுகளின் முனையிலும் பாதங்களிலும் இரையை கிளறித் தேடும் சொண்டிலுமே இவை அதிகமாக உணர்வுத் தன்மையை கொண்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அபிலாஷ்


FUNDAY TIMES விஜய் PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE

# அகில இலங்கை கட்டுரைப் போட்டி

அனுசரணை:- மக்கள் வங்கி

People's Bank Sisu Udana An outstanding future generation

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் நடத்தப்படும் 'விஜய்' அகில இலங்கை கட்டுரைப்போட்டியில் பங்குகொள்ள வருமாறு உங்களை வரவேற்கிறோம். இந்தப் போட்டியில் நாடெங்குமுள்ள நான்கு பிரிவு மாணவர்களும் பங்குபற்றலாம். கட்டுரைகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் எந்த மொழியிலும் எழுதப்படலாம்.

**கட்டுரைக்கான தலைப்புக்கள் வருமாறு:**

தரம் 2-3: 'எனது பாடசாலை' எனும் தலைப்பில் 10 வசனங்கள் (சுமார் 100 சொற்கள்)

தரம் 4-5: எனது நாடு (150 சொற்கள்)

தரம் 6-7: நமது சூழலை பாதுகாத்தல் (200 சொற்கள்)

தரம் 8-9: ஒற்றுமையே பலம்

**கட்டுரைகள் அனுப்புவதற்கான முடிவுத் திகதி . 18 மே 2008**

கிடைக்கப்படும் கட்டுரைகளில் தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழி மூலம் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும்10 இறுதிப்போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். இறுதிக்கட்டப்போட்டி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று வீதம் 25 நிலையங்களில் நடத்தப்படும்.

தெரிவு செய்யப்பட்ட இறுதிப்போட்டியாளர்கள் குறிப்பிட்ட திகதியன்று அருகிலுள்ள நிலையத்துக்கு வருமாறு கேட்கப்படுவார்கள். அன்றைய தினம் மாவட்ட நிலையங்களில் நடத்தப்படும் போட்டியின் போது கொடுக்கப்படும் புதிய தலைப்பில் குறிப்பிட்ட நேரத்துக்குள் கட்டுரைகள் எழுதி முடிக்கப்பட வேண்டும்.

மத்தியஸ்தர் குழுவொன்று அகில இலங்கை ரீதியிலான வெற்றியாளர்களை தெரிவு செய்யும். அவர்களின் முடிவே இறுதியானதாகும்.

**பரிசுகள்**

பரிசுகள்: ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு மொழியிலும் ஐந்து பரிசுகள் வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும்.

முதலாவது இடம்: ரூபா 10,000 பணப்பரிசும், சிசு உதான கணக்குக்கு 5,000 ரூபாவும்.

2 ஆம் இடம்: ரூபா 7,000 பணப் பரிசும், சிசு உதான கணக்குக்கு 3,500 ரூபாவும்.

3 ஆம் இடம்: ரூபா 5,000 பணப் பரிசும் சிசு உதான கணக்குக்கு 2,500 ரூபாவும்.

4 ஆம் இடம்: ரூபா 3,000 பணப் பரிசும் சிசு உதான கணக்குக்கு 1500 ரூபாவும்.

5 ஆம் இடம்: ரூபா 2,000 பணப் பரிசும் சிசு உதான கணக்குக்கு 1,000 ரூபாவும்.

**மாவட்ட பரிசுகள்**

மாவட்ட ரீதியில் ஒவ்வொரு வயதுப் பிரிவிலிருந்தும் ஒவ்வொரு மொழியிலிருந்தும் சிறந்த வெற்றியாளருக்கு ரூபா 1000 பரிசு.

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் முதல் மூன்று அகில இலங்கை ரீதியிலான வெற்றியாளர்களுக்கு வெற்றிச் சின்னங்கள் வழங்கப்படும்.

**நற்சான்றிதழ்கள்**

அகில இலங்கை மற்றும் மாவட்ட ரீதியிலான வெற்றியாளர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கூப்பனில் எல்லா முக்கிய விபரங் ... இணைத்து எமக்கு அனுப்பி வைக்கவும். மேற்படி, கட்டுரைகள் உங்களின் சுயமுயற்சியால் எழுதப்பட்டது என்பது பெற்றோரால் அல்லது ஆசிரியரால் உறுதிப் படுத்தப்படவேண்டும்.

**நிலையங்கள்**

மாவட்ட நிலையங்கள் பற்றிய விபரம் காலக் கிரமத்தில் வெளியிடப் படும்.

FUNDAY TIMES அகில-இலங்கை கட்டுரைப் போட்டி விஜய்

பெயர் : ..............................

பிறந்த திகதி : ..............................

முகவரி : ..............................

..............................

தொலைபேசி : ..............................

பாடசாலை : ..............................

மாவட்டம் : ..............................

PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE People's Bank Sisu Udana

விஜய், கட்டுரைப் போட்டி த.பெ.இல 2037, கொழும்பு.

அல்லது

விஜய், கட்டுரைப் போட்டி 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන්
# ஆயுபோவன்
# வணக்கம்

நளினிக்கும் தோழன் சரத்துக்கும் இடையே நடைபெறும் ஒரு உரையாடல் மூலம் சிங்கள வாக்கிய அமைப்புக்கள் சிலவற்றை தருகின்றோம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

සරත්: ආයුබෝවන් නලිනි.
சரத்: ஆயுபோவன் நளினி.
சரத்: வணக்கம் நளினி.

නලිනි: ආයුබෝවන් සරත්.
நளினி: ஆயுபோவன் சரத்.
நளினி: வணக்கம் சரத்.

සරත්: නලිනි කොහේ ද යන්නේ ?
சரத்: நளினி கொஹேத யன்னே?
சரத்: நளினி எங்கே செல்கின்றீர்கள்?

නලිනි: අපි උපන්දින සාදයකට යනවා.
நளினி: அபி உபன்தின சாதயகட யனவா.
நளினி: நாங்கள் பிறந்ததின விழாவொன்றுக்கு செல்கின்றோம்.

සරත්: මේ කවුද නංගි ද ?
சரத்: மே கவுத நங்கித?
சரத்: இவர் யார் உங்கள் தங்கையா?

නලිනි: නැහැ. මේ මගේ යහළුවෙක්, නම රාණි.
நளினி: நெஹே. மே மகே யஹளுவெக், நம ராணி.
நளினி: இல்லை. இவர் என் நண்பி, பெயர் ராணி.

සරත්: කාගෙ ද උපන්දිනය ?
சரத்: காகெத உபன்தினய?
சரத்: யாருடைய பிறந்த தினம்?

නලිනි: මගේ යහළුවෙකුගේ. අපට වෙලා ගියා, ගිහින් එන්නම්.
நளினி: மகே யஹளுவெகுகே. அபட வெளா கியா, கிஹின் என்னம்.
நளினி: என்னுடைய நண்பருடைய பிறந்ததின வீட்டிற்கு செல்கின்றோம். நேரமாகிவிட்டது, நாங்கள் சென்று வருகின்றோம்.

සරත්: හොඳයි, ගිහින් එන්න.
சரத்: ஹொந்தய், கிஹின் என்ன.
சரத்: நல்லது, சென்று வாருங்கள்.

## අභ්‍යාසය பயிற்சி

வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.

உதா: வணக்கம் நளினி.
ආයුබෝවන් නලිනි.

i. நளினி எங்கே செல்கின்றீர்கள்.
ii. இவர் யார் உங்கள் தங்கையா?
iii. இவர் என் நண்பி.
iv. யாருடைய பிறந்த தினம்?




## உடன்பாடு வாக்கியமும் - எதிர்மறை வாக்கியமும்

எதிர்கால தனி வாக்கியங்களில் (Future Simple Tense) காணப்படுகின்ற 'உடன்பாடு' வாக்கியங்களை 'எதிர்மறை' வாக்கியங்களாக மாற்றியமைக்கும் போது ஏற்படும் மாற்றங்களை உதாரணங்கள் மூலம் பயில்வோம்.

(அ) I will spend - நான் செலவழிப்பேன். (உடன்பாடு)
(ஆ) I won't spend - நான் செலவழிக்கமாட்டேன். (எதிர்மறை)
(அ) You will spend - நீ செலவழிப்பாய். (உடன்பாடு)
(ஆ) You won't spend - நீ செலவழிக்கமாட்டாய். (எதிர்மறை)
(அ) We will spend - நாங்கள் செலவழிப்போம். (உடன்பாடு)
(ஆ) We won't spend - நாங்கள் செலவழிக்கமாட்டோம். (எதிர்மறை)
(அ) They will spend - அவர்கள் செலவழிப்பார்கள். (உடன்பாடு)
(ஆ) They won't spend - அவர்கள் செலவழிக்கமாட்டார்கள். (எதிர்மறை)

* மேற்படி வாக்கியங்களில் செயற்படுபொருள் (Object) சேர்க்கப்படுகின்ற போது, அவை பின்வருமாறு அமைகின்றன.

(அ) I will spend more money.
நான் அதிக பணம் செலவழிப்பேன். (உடன்பாடு)
(ஆ) I won't spend more money.
நான் அதிக பணம் செலவழிக்கமாட்டேன். (எதிர்மறை)
(அ) You will spend more money.
நீ அதிக பணம் செலவழிப்பாய். (உடன்பாடு)
(ஆ) You won't spend more money.
நீ அதிக பணம் செலவழிக்கமாட்டாய். (எதிர்மறை)
(ஆ) We will spend some money.
நாங்கள் கொஞ்சம் பணம் செலவழிப்போம். (உடன்பாடு)
(அ) We won't spend any money.
நாங்கள் எதுவித பணமும் செலவழிக்கமாட்டோம். (எதிர்மறை)
(ஆ) They will spend more money.
அவர்கள் அதிக பணம் செலவழிப்பார்கள். (உடன்பாடு)
(ஆ) They won't spend any money.
அவர்கள் எதுவித பணத்தையும் செலவழிக்கமாட்டார்கள். (எதிர்மறை)

* **He, She, It** முதலான பிரதிப் பெயர்ச் சொற்களை **(Pronouns)** எழுவாய்ப் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட வேறு சில வாக்கியங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) He will send - அவன் அனுப்புவான். (உடன்பாடு) - ஆண்பால்
(ஆ) He won't send - அவன் அனுப்பமாட்டான். (எதிர்மறை)
(அ) She will send - அவள் அனுப்புவாள். (உடன்பாடு) - பெண்பால்.
(ஆ) She won't send - அவள் அனுப்பமாட்டாள். (எதிர்மறை)
(அ) It will jump - அது பாயும். (உடன்பாடு) ஒன்றன்பால்.
(ஆ) It won't jump - அது பாயாது. (எதிர்மறை)

* மேற்படி வாக்கியங்களில் செயற்படுபொருள் (object) சேர்க்கப்படுகின்ற போது அவை பின்வருமாறு அமைகின்றன.

(அ) He will send that letter.
அவன் அந்தக் கடிதத்தை அனுப்புவான். (உடன்பாடு) - ஆண்பால்
(ஆ) He won't send that letter.
அவன் அந்தக் கடிதத்தை அனுப்பமாட்டான். (எதிர்மறை)
(அ) She will send that parcel.
அவள் அந்தப் பொதியை அனுப்புவாள். (உடன்பாடு) - பெண்பால்.
(ஆ) She won't send that parcel.
அவள் அந்தப் பொதியை அனுப்பமாட்டாள். (எதிர்மறை) **(தொடரும்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.



# காலநிலை மாற்றத்தினால் வறுமை நிலை அதிகரிப்பு

உலக நாடுகளில் உணவு வகைகளின் விலை அதிகரிப்பின் காரணத்தால்,வறிய நாடுகளைச் சேர்ந்த பத்துக் கோடிக்கும் மேற்பட்ட மக்கள் வறிய நிலைக்கு ஆளாகக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக உலக வங்கியின் தலைவர் ரொபர்ட் சொலிக் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று வருடங்களில் மாத்திரம் பல நாடுகளில் உணவுப் பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரித்துள்ளன. இதன் காரணமாக குறைந்த வருமானத்தைப் பெறுபவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனைக் கருத்திற்கொண்டு உலக வங்கித் தலைவர் புதிய திட்டமொன்றையும் முன் வைத்துள்ளார். இந்த யோசனையை பல நாடுகளையும் சேர்ந்த அமைப்புக்களும், நிதியங்களும் வரவேற்றுள்ளன.

காலநிலையில் ஏற்பட்ட திடீர் மாற்றங்களின் காரணமாக பல நாடு



களில் விளைச்சல்கள் பாதிக்கப்பட்டன. இவற்றின் பெறுபேறாகவே மேற்படி சிக்கல் நிலை தோன்றியுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

எனவே, இவற்றை நிவர்த்திக்கும் நோக்கில் உலக வங்கியின் தலைவர் முன்வைத்த யோசனையை நடைமுறைப்படுத்தினால் மக்களுக்கு அது நன்மையை அளிக்கும் என்றும் கருதப்படுகின்றது.

# மின்னல் தாக்குதல்



அயர்லாந்து பிரதமர் பேர்ட்டி எஹர்ன் பயணம் செய்த விமானம் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகியது. எனினும், விமானத்தில் பயணித்த எவருக்கும் அனர்த்தங்கள் ஏற்படவில்லை.

வட அயர்லாந்தில் மோதல்கள் நிறுத்தப்பட்டு பத்து வருடங்கள் நிறைவடைவதையொட்டி நடைபெற்ற விசேட வைபவமொன்றில் கலந்து கொள்வதற்காகச் சென்றபோதே மேற்படி மின்னல் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

# இந்தியா-பங்களாதேஷ் ரெயில் சேவை ஆரம்பம்

இந்தியா-பங்களாதேஷ் நாடுகளுக்கிடையிலான ரெயில் சேவை 40 வருடங்களுக்குப் பின்னர் இவ் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதியன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகியது.



'மொயித்ரி (நட்பு) எக்ஸ்பிரஸ்' என்று பெயரிடப்பட்ட இந்த ரெயில் சேவை பங்களாதேஷின் தலைநகர் டாக்காவிலிருந்து இந்தியாவின் கொல்கத்தா நகர் நோக்கிப் பயணித்தது. 1965 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தற்போதுதான் இரண்டு நாடுகளுக்குமிடையே இந்த ரெயில் சேவை ஆரம்பமாகியுள்ளது. இந்தியா-பங்களாதேஷ் நாடுகள் இதனை ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வாகத் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானின் ஆளுகையிலான ஒரு பகுதியாக இருந்த காலகட்டத்தில் பாகிஸ்தான்-இந்தியா நாடுகளுக்கிடையே போர் நடைபெற்ற காலகட்டத்திலேயே மேற்படி ரெயில் சேவை நிறுத்தப்பட்டது.

1947 ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரமடைந்ததன் பின்னர் இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் தனியே பிரிந்தது. இதன்படி பாகிஸ்தானின் எல்லைக்குள் இன்றைய பங்களாதேஷும் அடங்கியது. நாளடைவில் பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் தனிநாடாகப் பிரிந்து சென்றது. 1990 ஆம் ஆண்டுகளில் இரண்டு நகரங்களுக்குமிடையே பஸ் போக்குவரத்து நடைபெற்றபோதிலும் ரெயில் சேவை நடைபெற்றிருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் அழைப்பு

வெனிசுவெலா நாட்டுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு விரும்புவதாக அமெரிக்க அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வெனிசுவெலா ஜனாதிபதி ஹியுகோ சாவேஸ் எப்போதும் அமெரிக்காவின் மேலாதிக்க நடவடிக்கைகளை விமர்சித்து வருபவராவார். எனினும், காலத்தின் தேவை கருதியே வெனிசுவெலாவுடன் உறவுகளை ஏற்படுத்த அமெரிக்கா விரும்புவதாகவும் கூறப்படுகின்றது.

அமெரிக்காவின் உதவி ராஜாங்கச் செயலாளரான டொம் ஹெனக் என்பவரே வெனிசுவெலாவுடன் அமெரிக்கா உறவுகளை ஏற்படுத்த விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

ஆர்ஜன்டீனாவில் சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தபோதே ஊடகவியலாளர்களிடம் இக்கருத்தினை அவர் தெரிவித்துள்ளார்.

வெனிசுவெலாதான் அமெரிக்காவிற்கு அதிகப்படியான எண்ணெய் ஏற்றுமதி செய்கின்ற நாடாகும். எனினும், அரசியல் ரீதியில் இரண்டு



நாடுகளுக்கும் இடையே தொடர்ந்தும் முறுகல் நிலை இருந்து கொண்டேதான் உள்ளது. எனவேதான், இதில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவே அமெரிக்கா தரப்பிலிருந்து சமிக்ஞை வழங்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

## அற்லஸ் கேள்வி - 148

**கேள்வி:** அமெரிக்காவிற்கு அதிகப்படியான எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடு எது?

சரியான விடை.........................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 148,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

போட்டி இல - 146 இன் சரியான விடை: 65 சதவீதமானோர்

பரிசு பெறுவோர்

எம்.ஹரிதர்ஷன்,
155/10 யூனியன் பிளேஸ்,கொழும்பு-02.

எம்.எஸ்.எஃப்.சாஜிதா,
2/2 சம்சுதீன் மாவத்தை,
எலுவில, பாணந்துறை.

எம்.சஃப்வான்,
38/1 வெலகெதர வீதி, பதுளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் மாணவர் கழகம்


அங்.இல : 1875
ஹஃபில் மிஹிலார், தரம் - 2D, கிறீன்வூட் கல்., அம்பதென்ன.


அங்.இல : 1876
த. விஜிசர்மிளா, தரம் - 4, கிளி/புனித திரேசா கல்., கிளிநொச்சி.


அங்.இல : 1877
வி. மகாசேனன், தரம் - 6D, யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.


அங்.இல : 1878
பி. கிஜானி, தரம் - 7, கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க.பாட., கிளிநொச்சி.


அங்.இல : 1879
எம். இன்ஷாட், தரம் - 7A, அல்-முபாரக் தேசிய பாட., மல்வானை.


அங்.இல : 1880
லோ. நிருஜன், தரம் - 8, சா/இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.


அங்.இல : 1881
ஆர். வினோதன், தரம் - 9B, சென்.ஜோன் பொஸ்கோ கல்லூரி, ஹட்டன்.


அங்.இல : 1882
ஜீ. இம்ரான், தரம் - 10C, இ/எம்பி பரியோவான் த.ம.வித்., இறக்குவானை.


அங்.இல : 1883
ர. ஜெயகாந்தன், தரம் - 10B, நு/டலோஸ் த.ம.வித்., உடப்புசல்லாவ.


அங்.இல : 1884
எம்.எஃப்.எம். இம்ரான், தரம் - 11, க/தேவாஹுவ வித்., கம்பளை.


அங்.இல : 1885
எம்.எம். ஸாஹிர், தரம் - 12, ஸாஹிரா தே.கல்., புத்தளம்.


அங்.இல : 1886
ஏகாம்பரநாதன் சஜந்தி, தரம் - 12, கிளி/பூநகரி நல்லூர் ம.வித்., பூநகரி.

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு







அண்மையில் நடைபெற்ற யாழ்.புனிதவளன் விளையாட்டுக் கழக வைர விழா நிகழ்வுகளின் போது, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அ.றொசான் என்பவர் பற்களால் சைக்கிளைத் தூக்கி சாதனையொன்றை நிகழ்த்தினார். சைக்கிளைப் படிப் படியாகத் தூக்கி அவர் சாதனை நிகழ்த்தியதையும் முன்னாள் மல்யுத்த வீரரான செபஸ்ரி சின்னத்துரை அவர்கள் சாதனையாளர் றொசானை மலர்மாலை அணிவித்து கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

*(தகவல்-த.பரமலிங்கம், குருநகர்)*



மாத்தளையைச் சேர்ந்த, நஜீம்டீன் மொஹமட் நஸீம் தனது 6ஆவது பிறந்த தினத்தை 3.4.2008 இல் தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடினார். இவரை உம்மா-வாப்பா உட்பட உற்றார், உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் கிருபையால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.




## கைவண்ணங்கள் த.பெ.எண் 2037 கொழும்பு

## அன்பு தம்பி தங்கைகளே!

'கைவண்ணங்கள்' பகுதிக்கு நீங்கள் தொடர்ந்தும் அனுப்பிக் கொண்டிருக்கின்ற சித்திரங்கள் எமக்குக் கிடைத்த வண்ணமிருக்கின்றன. எனினும், எல்லாச் சித்திரங்களையும் ஒரே தடவையில் பிரசுரித்து விட முடியாதல்லவா. எனவே, தொடர்ந்தும் உங்கள் சித்திரங்களை அனுப்புங்கள். நீங்கள் எதிர்பாராத நேரத்தில் உங்கள் சித்திரங்கள் 'கைவண்ணங்கள்' பகுதியில் இடம் பெறலாம். அதேவேளை, நீங்கள் உங்கள் சித்திரங்களை அனுப்பும்போது தவறாமல் உங்கள் பெயர், கற்கும் தரம், பாடசாலை, அதன் முகவரி உட்பட திகதியையும் மறக்காமல் எழுதி அனுப்புங்கள். இந்த விபரங்கள் உள்ளடக்கப்படாத சித்திரங்கள் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதை நீங்கள் அவசியம் கருத்தில் கொள்ளவும்.


பி.யாழினி, தரம் - 10B, அப்புத்தளை த.ம.கல்., அப்புத்தளை.


சு.லெ.றினாஸ், தரம் - 2A, மட்/பிர்தௌஸ் வித்., காத்தான்குடி-03.


தினேஸ்குமார், தரம் - 6B, நு/ஆட்லோ த.வித்., அக்கரப்பத்தனை.


எம்.ஹுஸ்னி, தரம் - 7, ஹிஜ்ராபுர முஸ்லிம் வித்., தெல்தெனிய.


சி.நிகேதனா, தரம் - 1V, மட்/வின்சன்ற் பெ.உ.தே.பா., மட்டக்களப்பு.


கிசோர்காந்த், தரம் - 9D, இந்துக் கல்., கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆணிமுத்தின் பிரகாசத்திலே பட்டுத்தெறிக்கும் எந்தவொரு பொருளுக்கும் நிழலோ, அன்றிப் பிரதி விம்பமோ உண்டாவது கிடையாது. அதன் பிரகாசத்திலே கண்கள் கூசுவதில்லை. இப்படியான அபூர்வமான முத்தை நீர் கலவாத பசும்பாலிலே போட்டால் அது மிதக்கும். பசும்பாலிலே அலை வட்டம் உண்டாகும். அம்முத்தை தலைமை மாலுமி சின்வாவிடம் கொடுத்து வைத்தான்




# ஆணிமுத்து அதிர்ஷ்டம்

படகுக்கப்பல் திருத்தப்பட்டு மீண்டபோது அந்த இரண்டு சுழியோடிகள் முகத்திலும் மகிழ்ச்சி முத்திரை படர்ந்திருந்தது அல்லவா! அதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது.

நீருக்குள் சுழியோடிய ஒருவன் கடலடியிலே, பிரகாசமான ஒளியை அவதானித்தான். கண்களுக்குக் கூச்சமில்லாத அத்தகைய ஒளி, சிலவகை நட்சத்திர மீன்களுக்கு இருக்கின்றது அல்லது ஆழ்கடலிலே சஞ்சாரம் செய்யும் முத்துச்சிப்பிகளுக்குரியது.

சுழியோடிகளிலொருவன், உயிரைப் பணயம் வைத்து மூச்சை அடக்கிப் பிடித்து ஆழ்கடலுள் ஊடறுத்துச் சென்றான். ஒளியை நெருங்கியபோது அந்த ஒளி மங்கிக்கொண்டு போவதைக் கவனித்தான். சந்தேகமில்லை நிச்சயமாக அது ஒரு முத்துச்சிப்பிதான். தனது அரவம் உணர்ந்து திறந்த வாயை மூடிக் கொள்கிறது என எண்ணி கைகளை நீட்டியவாறு அதனைத் தொட்டான். நிதானம் தப்பாமல் லபக்கென்று சிப்பியைப் பற்றினான். நல்லகாலம் முத்துச்சிப்பி அவனது பிடியிலே சிக்கிக்கொண்டது.

மகிழ்ச்சிப் பிரவாகத்துடன் ....... எழுந்து மேலே வந்து சேர்ந்தான். முத்துச் சிப்பிக்குள்ளிருந்து சங்கீதத் தொனி கேட்டது.

அதுவொரு சாமானியமான முத்துச்சிப்பியல்ல. விலைமதிக்கமுடியாத ஆணி முத்து. கிடைத்தற்கரியது. ஆணிமுத்தின் பிரகாசத்திலே பட்டுத்தெறிக்கும் எந்தவொரு பொருளுக்கும் நிழலோ, அன்றிப் பிரதி விம்பமோ உண்டாவது கிடையாது. அதன் பிரகாசத்திலே கண்கள் கூசுவதில்லை. இப்படியான அபூர்வமான முத்தை நீர் கலவாத பசும்பாலிலே போட்டால் அது மிதக்கும். பசும்பாலிலே அலை வட்டம் உண்டாகும்.

இப்படியாக அந்த முத்துவின் சிறப்புக்கள் பற்றி ஏற்கனவே அறிந்து வைத்திருந்த அச்சுழியோடி எதையுமே மூடி மறைக்காமல் அனைவர் முன்னிலையிலும் உண்மையைக் கூறி முத்துப் பரலை அனைவருக்கும் காண்பித்தான். படகுப் பயணம் முடியும்வரை அம்முத்தை தலைமை மாலுமி சின்வாவிடம் கொடுத்து வைத்தான்.

ஆணிமுத்து வந்ததிலிருந்து பயணிகளுக்கு நல்லகாலம் பிறந்திருப்பதாகவே அனைவரும் உணர்ந்தனர். கப்பலில் எல்லாக்கருமங்களும் சுபமாக நிகழ்ந்தவண்ணமிருந்தன. நோய்வாய்ப்பட்டிருந்த பலர் குணமுற்றனர். வான் வெளித்திசைகள் தெளிவாகின. தாம் இப்போது எந்தத் திசையிலே பயணிக்கின்றோம் என்ற அனுமாணம் தெளிவானது. பழுதுபட்டு ஊதமறுத்த கப்பலின் 'சயரன்' இப்போது தெளிவாக ஒலித்தது. எனவே, அனுப்பப்பட்ட அபாய அறிவிப்புக்கு நல்ல பதில் கிடைக்குமென்ற எதிர்பார்ப்பிலே மாலுமி சின்வா காத்திருந்தாள்.

எதிர்பார்த்தபடியே படகுக்கப்பலின் அலாரம் ஒலித்தது. நெட்டாங்கில் அறுநூறு கடல் மைல் தொலைவில் அக்கினி மூலை வழியே வந்தால் அதுவே இந்து சமுத்திரத்தின் நுழைமுகம் என கடலிலே சென்று கொண்டிருந்த ஏதோவொரு நாட்டுக் கப்பலிலிருந்து அறிக்கை கிடைத்தது. சின்வா படகுக் கப்பலை திசை திருப்பினாள்.

கப்பலில் உணவு மற்றும் அத்தியாவசியப் பெருட்களெல்லாம் முடியும் நிலையில் இருந்தன. ஆணிமுத்து வைக்கப்பட்டிருந்த பெட்டியிலிருந்து இனியராகம், இன்ப கானமாய் ஒலித்துக் கொண்டேயிருந்தது. செவிக்கின்பமான அந்த ஒலி, ஒருவித தெய்வீகத்தன்மையாய் எல்லோர் மனத்திலும் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. (தொடரும்....)

# நினைத்ததை முடிக்கும் வல்லமை

*சங்கர், தயா இருவரும் நண்பர்கள். சங்கர் எதிலும் அவசரப்படுவான்; சரியான கோபக்காரன். ஆனால், தயா பொறுமைசாலி. எந்தக் காரியம் ஆனாலும், மிகவும் பொறுமையாக இருந்து வெற்றி பெறுவான். இது சங்கரை எரிச்சல் படுத்தியது. ஒருநாள், கோபத்தின் உச்சியில் இருந்த நண்பனை ஆசுவாசப்படுத்தி அழைத்துச் சென்றான் தயா.*

*குளிர்ந்த காற்றும் அழகிய ஓடையும் சங்கரின் கோபத்தை தனித்தது. அப்போது அங்கிருந்த ஓடையை நோக்கி சென்று கொண்டிருந்த ஆமையைச் சுட்டிக் காட்டினான் தயா. அப்போது திடீரென்று ஆமையை நோக்கிக் காகம் ஒன்று பறந்து வந்தது. உடனே ஆமை உடலை தன் ஓட்டுக்குள் சுருக்கிக் கொண்டது. சிறிது நேரம் வரை அவ்வாறு இருந்தது காகம். பொறுத்துப் பார்த்தது. ஆமை நகர்வதாக இல்லை. ஆகவே, அது பொறுமையிழந்து பறந்து சென்றது.*

*காகம் இல்லாததைக் கண்ட ஆமை மீண்டும் நகரத் தொடங்கியது. கொஞ்சத் தூரம் நகர்ந்திருக்கும். அப்போது நாய் ஒன்று அதைப் பார்த்து ஓடி வந்தது. ஆமை முன்போலவே தன் உடலைச் சுருக்கிக் கொண்டது.*

*நாய் ஆமையைக் கடிக்க முயன்றது. அதனால், ஓட்டினைக் கடிக்கத்தான் முடிந்ததே ஒழிய, ஆமையின் உடலை நாயினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நாயும் சிறிது நேரம் என்னென்னவோ செய்து பார்த்தபின் தோல்வியடைந்து வெறுப்புக்கொண்டு, 'சீச்சி இந்தப் பழம் புளிக்கும்' என்பது போல ஓடிவிட்டது. கொஞ்ச நேரம் நகராதிருந்த ஆமை, நாய் இல்லை என்பதை உணர்ந்ததும் ஓடையை நோக்கி வந்தது. கரையில் தண்ணீரில் இறங்கியதும் மிக வேகமாகச் சென்று மறைந்துவிட்டது.*



*"நண்பா பார்த்தாயா ஆமையை!" என்றான். "பார்த்தேன்" என்றான் சங்கர்.அடுத்து சற்று தூரத்திலிருந்து புதரில் முயல் ஒன்று குபுக்கென்று வெளியே ஓடி வந்தது. அது இரையைத் தேடிக் கொண்டிருந்தது. அப்போது ஆமையைக் கடிக்க நினைத்த நாய் அங்கே வந்தது. அதைக் கண்டதும் முயல் மிக வேகமாக ஓடியது. காரணம் தான் ஓட்டத்தில் வல்லவன், தன்னை யாரும் பிடிக்க முடியாது என்ற எண்ணத்தில் ஓடியது. ஆனால், நாயோ விடவில்லை. தொடர்ந்து ஓடியது. கடைசியில் நாய் முயலைப் பிடித்துவிட்டது. முயலும் நாய்க்கு உணவானது.*

*"இதையும் பார்த்தாயா?" என்று கேட்டான் தயா.*

*"ஆம்" என்றான் சங்கர்.*

*"இப்போது என்ன புரிகிறது?" என்று கேட்டான் தயா.*

*"ஆமை மெதுவாகச் சென்றாலும் தற்காப்புடன் செல்கிறது. அது எச்சரிக்கை மிகுந்த பிராணி. முயல் வேகமாக ஓடினாலும் அதற்குத் தப்பிக்க வழி தெரியவில்லை" என்றான் சங்கர்.*

*"நண்பா பொறுமையாக இருந்து செயல்படுபவன். தான் நினைத்ததை முடிப்பான்; அத்தோடு ஆமையைப் போல் நூறாண்டு வாழ்வான். ஆனால், முயலைப் போல பொறுமையிழந்து அலறித் திரிபவன் முயலைப் போல் அற்ப ஆயுளையே பெறுவான்" என்றான் தயா. என் வெற்றியின் ரகசியமே இதுதான். கோபப்படுவதால் காரியங்கள் கெட்டுத்தான் போகும்.*

*எத்தனையோ அறிவுரை கொடுத்தாலும் ஏறாத மண்டையில் இயற்கையின் மூலம் நண்பன் கொடுத்த அறிவுரை சங்கர் மனதில் பட்டென்று நின்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆஸி அணி இந்தியா விஜயம்

அவுஸ்திரேலியா கிரிக்கெட் அணி இந்த வருடக் கடைசியில் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. செப்டெம்பர் 29 ஆம் திகதி இந்தியா வருகின்ற ஆஸி அணி 4 டெஸ்ட் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளது.

கடந்த வருட இறுதியில் அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்த இந்திய அணி, பலவித சர்ச்சைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தமை நாம் அறிந்ததே. அதுமட்டுமன்றி இந்திய அணி கடுமையான போட்டியை வழங்கியமையால் ஆஸி அணிக்கு ஒருவித கௌரவப் பிரச்சினையையும் அது ஏற்படுத்தியிருந்தது. எனவே, இந்தியாவிற்கு ஆஸி அணி விஜயம் செய்யும்போது இரண்டு அணிகளும் கௌரவப் பிரச்சினையையும் முன்னிறுத்திப் போட்டியிடும் என்று எதிர்பார்க்கலாம்.

# மீண்டும் பெக்கம்



இங்கிலாந்து தேசிய கால்பந்தாட்ட அணியில் மீண்டும் டேவிட் பெக்கம் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளார். கடந்த உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளின் போது பெக்கம் சரிவரத் திறமைகளை வெளிகாட்டவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வந்தது. இதனையடுத்தே அணியில் அவருக்கு வாய்ப்புக்கள் வழங்கப்படவில்லை. எனவே, அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் மாநிலத்தில் உள்ள 'கெலக்ஸீஸ்' என்ற கழகத்தில் விளையாடுவதற்கு பெருமளவு தொகைக்கு அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி கழக மட்டத்தில் உலக நாடுகளில் பல போட்டிகளில் கலந்து கொண்ட பெக்கம் பல வகையிலும் தனது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தார். இதனை இங்கிலாந்து கால்பந்தாட்ட அணியின் பயிற்றுனர் அவதானித்ததன் பயனாக பெக்கமை மீண்டும் இங்கிலாந்தின் தேசிய அணியில் இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதனையடுத்தே பெக்கம் மீண்டும் இங்கிலாந்து அணிக்காக விளையாடவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வாய்ப்பை இழந்தார் அக்தார்




இந்திய கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள ஐ.பி.எல் போட்டிகளில் பாகிஸ்தான் வீரர் அக்தார் கலந்து கொள்வதற்கு ஐ.பி.எல் அனுமதி வழங்க மறுத்துள்ளது. போட்டிக்களத்தில் ஒழுக்கநெறி தவறியமை காரணமாக அக்தாருக்கு ஐந்து ஆண்டு கால போட்டித்தடை விதிக்கப்பட்டுள்ளதையடுத்தே, ஐ.பி.எல் போட்டிகளில் கலந்து கொள்வதற்கும் அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

மேற்படி, ஐ.பி.எல் போட்டிகளில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு ஷொஹெப் அக்தார் முன்னதாக தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே, தற்போது அக்தாருக்குப் பதிலாக பாகிஸ்தான் வீரர் உமர் குல் அணியில் இணைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




## சானியா மிர்சாவுக்கு காயம்

இந்தியாவின் டென்னிஸ் நட்சத்திரம் சானியா மிர்சாவின் மணிக்கட்டில் ஏற்பட்ட காயத்தினால் அவரால் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால், அடுத்தடுத்து மூன்று வருடங்களாக சானியா மிர்சாவினால் பிரெஞ்ச் பகிரங்க டென்னிஸ் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாமல் போயுள்ளமை சுட்டிக் காட்டத்தக்கது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள சானியா மிர்சா காயம் காரணமாக போட்டிகளில் ஈடுபட முடியாமல் போயுள்ளமை குறித்து கவலைப்படுவதாகவும், காயப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளபோதிலும் ஆசிய நாட்டைச் சேர்ந்தவர்களே அதிகமாக இவ்வாறு காயங்களுக்கு உள்ளாகின்றமை தவிர்க்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். சத்திரசிகிச்சையின் பின் சானியா ஓய்வு பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## டெஸ்ட் தரப்பட்டியல்



சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலில் அவுஸ்திரேலியா தொடர்ந்தும் முதலாவது இடத்தைப் பெற்றுள்ளது.

பின்தங்கிய நிலையில் இருந்த இந்தியா, தென் ஆபிரிக்காவுடனான இறுதி டெஸ்ட் போட்டியில் வெற்றியீட்டியமையால் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகள் முறையே ஐந்தாம், ஆறாம் இடங்களைப் பெற்றுள்ளன.

டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியல் வருமாறு:-

| இடம் | நாடு | புள்ளி |
|---|---|---|
| 01 | அவுஸ்திரேலியா | 141 |
| 02 | இந்தியா | 111 |
| 03 | தெ.ஆபிரிக்கா | 109 |
| 04 | இங்கிலாந்து | 108 |
| 05 | இலங்கை | 106 |
| 06 | பாகிஸ்தான் | 94 |
| 07 | நியூஸிலாந்து | 91 |
| 08 | மே.இ.தீவுகள் | 71 |
| 09 | பங்களாதேஷ் | 01 |



## ஐ.சி.சியின் ஒருநாள் தரப்பட்டியல்

சர்வதேச கிரிக்கெட் சபையின் ஒருநாள் போட்டிகளுக்கான தரப்படுத்தல் பட்டியலில் தென் ஆபிரிக்க அணி முதலாவது இடத்தை தக்க வைத்துக்கொண்டுள்ளது.

இப்பட்டியலின்படி இலங்கை அணி ஏழாவது இடத்திலும், இந்திய அணி நான்காவது இடத்திலும், பாகிஸ்தான் அணி ஐந்தாவது இடத்திலும் உள்ளன.

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டித்தொடரில் இலங்கை அணி தோல்வியை தழுவியமையாலேயே இலங்கை அணி ஏழாவது இடத்திற்கு பின் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தரப்படுத்தல் பட்டியல் வருமாறு:

| இடம் | நாடு | புள்ளி |
|---|---|---|
| 01 | தெ.ஆபிரிக்கா | 127 |
| 02 | அவுஸ்திரேலியா | 127 |
| 03 | நியூஸிலாந்து | 113 |
| 04 | இந்தியா | 113 |
| 05 | பாகிஸ்தான் | 110 |
| 06 | இங்கிலாந்து | 105 |
| 07 | இலங்கை | 105 |
| 08 | மே.இ.தீவுகள் | 99 |
| 09 | பங்களாதேஷ் | 47 |
| 10 | அயர்லாந்து | 20 |
| 11 | சிம்பாப்வே | 18 |
| 12 | கென்யா | 00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிலும் வாழ்ந்ததாகக் கூறப்படும் பண்டைய மானிட வர்க்கம்

இன்று உலகில் வாழுகின்ற மனிதன் குரங்கில் இருந்துதான் பரிணாமம் அடைந்தான் என்பது சார்ள்ஸ் டார்வினின் கோட்பாடாகும். இதனை நிரூபிக்கும் வகையில் ஆசியாவின் பல பகுதிகளிலிருந்தும் ஐரோப்பாவில் இருந்தும் பல சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. கூடவே, எமது நாட்டிலும் அதற்குரிய ஆதாரங்கள் காணப்படுகின்றன.

மனிதன் பல கோடி வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த ஒரு வகை இராட்சதக் குரங்குகளில் இருந்துதான் பரிணாமம் அடைந்தான் என்ற வாதத்தை அவர் முன் வைப்பதற்குக் காரணம், அவர் அவதானித்த சில இராட்சதக் குரங்கினத்திடமிருந்த அதே பண்புகள், செயற்பாடுகள் மானிட வர்க்கத்திடம் காணப்பட்டமையாகும்.

குறிப்பாக, கிழக்கு ஆபிரிக்கா மற்றும் தென் ஆபிரிக்க குகைப் பிரதேசங்களில் மேற்கொண்ட ஆய்வுகளின் போது குரங்கினம் மனித உருவத்தில் பரிணாம மாற்றம் அடைந்ததற்கான மரபணுக்களும் எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. அதேவேளை, இந்தக் குரங்கினப் பரிணாமம் 30 இலட்சம் வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்திருக்கலாம் என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்தப் பரிணாம மாற்றம் குரங்கினத்தின் உடம்பிலும் மூளையிலுமே ஏற்பட்டிருக்கலாம் என அவர்கள் நம்புகின்றனர்.

ஆபிரிக்கா, சீனா மற்றும் இந்தியா போன்ற பிரதேசங்களில் நடாத்தப்பட்ட இந்த வானர மனிதன் பற்றிய அகழ்வாராய்ச்சிகளின்போது பலவிதமான தகவல்கள் கிடைத்திருப்பதாக புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். எனினும், இலங்கையில் இத்தகைய தொரு நீண்ட காலப்பகுதிக்குரிய சான்றுகள் எதுவும் கண்டுபிடிக்கப் படவில்லை.

ஆனாலும், மனிதர்களிடையே ஏற்பட்ட சில பண்பு ரீதியிலான, உடல் ரீதியான சில பரிணாம மாற்றங்களை இலங்கையிலும் அவதானிக்க முடிவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

## இலங்கையிலிருந்து கிடைக்கப் பெற்ற ஆதாரங்கள்

களுத்துறை மாவட்டத்தில் புளத்சிங்கள பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 'பாஹியன் கல' என்ற இடத்தில் குகைப் பகுதியொன்றில் மேற்கொண்ட ஆய்வொன்றின்போது பண்டைய மானிட சிதைவுகள் சில கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

இங்கு மேற்கொண்ட புதைபொருள் ஆராய்ச்சியின் போது மண்டை ஓடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மண்டை ஓடானது, 28,000-37,000 வருடங்கள் பழமை வாய்ந்தது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்ற ஆய்வொன்று சப்ரகமுவ மாகாணத்தில் குருவிட்ட பிரதேசத்தில் 'பட்டதொம்ப' குகைப் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு அங்கு சில மானிட என்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை, சுமார் 16,000 வருடங்கள் பழைமை வாய்ந்தவை என்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளன.

இவை தவிர, கிதுல்கல என்ற பகுதியிலுள்ள கற்குகையொன்றிலிருந்தும் என்புக்கூடு ஒன்றின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்த என்புக்கூடானது 12,500 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த வானர மனிதனின் உடல் அமைப்பை ஒத்த என்புக்கூடு என்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

அவ்வாறே, பலாங்கொடைப் பிரதேசத்தில் பெல்லன்பெதிபலஸ்ஸ என்ற பகுதியிலும் என்புக்கூடொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதோடு அது 6,000 வருடங்கள் பழைமை வாய்ந்தது என்ற தகவல் வெளியாகியிருக்கின்றது.

கண்டறியப்பட்ட ஆதாரங்களை வைத்து நோக்கும் போது இந்த என்புத் தொகுதிகளானது 'ஹோமோ சேப்பியன்' என்ற மானிட வர்க்கத்திற்குரியன என்பது நிரூபணமாகின்றது. 'சேப்பியன்' என்பது நவீன கால மானிட இனமாகும். மேலும், இந்த மானிட இனம் 'ஹோமோ சேப்பியன் பலன் கொடன்சிஸ்' என்ற பெயர் கொண்டும் அழைக்கப்படுகின்றது. இந்த மானிட இனத்தைத்தான் நாம் 'பலாங்கொடை மானிடன்' என்று அழைக்கின்றோம்.




## பயன்படுத்திய உபகரணங்கள்

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பதிராஜவெல பகுதியில் கடல் பிரதேசத்தில் மணற் குன்றுகள் காணப்படுகின்றன. இந்த மணற் குன்றுகளுக்கு அடியில் செம்மண் படிவு காணப்படுகின்றது. இந்த படிவிற்கு கீழ் இருந்து பண்டைய மனிதனால் பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் சில உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை 'வானர மனிதர்கள்' என்று அடையாளப்படுத்தப்பட்ட மானிட இனம் வேட்டையாடப் பயன்படுத்திய உபகரணங்களாக இருக்கலாம் என்று ஊகிக்கப்படுகின்றது.

இந்த மணற்படிவு சுமார் 1,25,000 முதல் 78,000 வருடங்கள் வரை பழைமை வாய்ந்ததாகும். வேட்டையாடுவதைப் பிரதான தொழிலாகக் கொண்ட இவர்கள் வேட்டையாடுவதற்காக கருங்கற்களால் ஆன கூரான ஆயுதங்களை தயாரித்திருந்தனர். இவை அநேகமாக வெள்ளை நிறக் கல்லால் (பளிங்குக்கல்) ஆனவை.


-அமீர் ஹுஸைன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

குறுக்கெழுத்துப் போட்டி இல.164




### மேலிருந்து கீழ்

01. நான்கு வேதங்களில் ஒன்று.
02. சக்தி - ஒத்தகருத்துச்சொல்.
03. யானை, குதிரை முதலியவற்றில் ஏறிப் பயணிப்பது.
04. ஓர் இசைக்கருவி.
06. நிரந்தர வதிவிடமின்றி நாளுக்கு நாள் இடத்தை மாற்றி வாழ்ந்து வருபவர்.
07. 'அதிர்ஷ்டம்' என்றும் பொருள்படும். (குழம்பி)

### இடமிருந்து வலம்

01. அரசனின் மகன்.
04. 'உரித்தான்' என்ற சொல்லின் பகுதி.
05. மூன்று பக்கம் நிலத்தாலும் ஒரு பக்கம் கடலாலும் சூழப்பட்டிருக்கும் நிலப்பகுதி.
08. ஜப்பானின் தலைநகரம்.
09. பெரும்பாலும் அழகான கற்கள் பதிக்கப்பட்டு கழுத்தில் அணியும் அணிகலன் ஒன்று.

### குறுக்கெழுத்துப்போட்டி 161 விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 01. நாத்திகன் | 01. நாரை |
| 02. துயரம் | 03. பணயம் |
| 03. பத்து | 04. திபெத் |
| 07. கோபி | 05. துலாம் |
| 08. நீர் | 06. கோன் (மாறி) |
| | 09. பிச்சை |

குறுக்கெழுத்துப் போட்டி -164
"விஜய்" த.பெ.எண். 2037
கொழும்பு

### பாராட்டுப் பெறுவோர்

எம்.எச்.எம்.ரயீஸ், தரம் - 10C,
ஸாஹிரா கல்., மாவனல்லை.

தர்ஷிகா நிஷாந்தி, தரம் - 8,
பாக்கியம் தே.கல்., மாத்தளை.

எஸ்.ஷாதுலா, தரம் - 8B,
இந்துக் கல்., பலாங்கொடை.

### அன்பு மாணவர்களே!

இது உங்கள் கவனத்திற்கு.....

இனிவரும் போட்டிகளுக்கான விடைகளை நீங்கள் தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். விடைகளை அனுப்பும் போது தவறாமல் உங்கள் பெயர், முகவரி, கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், அதன் முகவரி, வசிக்கும் நகரம், மாவட்டம் என்பனவற்றையும் எழுதி அனுப்புங்கள். அவை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை காலதாமதமின்றி சேர்ப்பதற்கு பெரும் துணையாக அமையும். அத்துடன், நீங்கள் உங்களுக்கு விரும்பிய எந்தவொரு போட்டியிலும் கலந்து கொள்ளலாம் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

3

### (A) கணக்குப் புதிர்

பெட்டியொன்றில் மொத்தம் 7 தோடைகள் உள்ளன. அவற்றில் 2 மஞ்சள் நிறத்திலானவை. பச்சை நிறத் தோடைகளோ மஞ்சள் நிறத் தோடம் பழங்களிலும் நிறை குறைந்தவை. பச்சை நிறத் தோடைகளை இரண்டு தடவைகளுக்கு நிறுத்தெடுத்தால் வரும் மொத்த நிறையானது 2 மஞ்சள் நிறத் தோடம்பழங்களினதும் மொத்த நிறைக்குச் சமனாகும். பச்சைத் தோடைகள் ஒவ்வொன்றும் ஒரே நிறையுடையது. பச்சை நிறத்தோடைகளை ஒரு முறை நிறுத்தால் அதன் மொத்த நிறை 25 கிராம் ஆகும்.

1. பெட்டியில் எத்தனை பச்சை நிறத் தோடைகள் உள்ளன?
2. பச்சை நிறத் தோடைகளை 2 தடவைகளுக்கு நிறுத்தெடுத்தால் வரும் மொத்த நிறை யாது?
3. மஞ்சள் நிறத் தோடையொன்றின் நிறை என்ன?
4. பெட்டியிலுள்ள பச்சை, மஞ்சள் நிறத் தோடைகளின் மொத்த நிறை யாது?

### (B) இடைவெளியை நிரப்புக

அ) 5, ......., 12, 17, ........., .........., 38, 47

ஆ) A, B, C, ........, .........., ........., D, ........., .........., ......... e, f


இ) 324, 300, ..........., 252, .........., ..........., 180

ஈ) .........., ..........., 21, 28, ............, 42, 49, ..........

உ) VI, ..........., XXVI, ..........., ..........., LVI, LXVI

### பெட்டியின் முன் பக்கத்திலா, பின் பக்கத்திலா பச்சை நிறம் தீட்டப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுங்கள்

2






தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.04.30 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 153
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு

## அறிவுக்கு விருந்து 150 விடைகள்

போட்டி: 01

- ✱ 1) 10 மேசைகள்
  2) 20 கதிரைகள்
- ✱✱ அதிகாலை 04.25, மு.ப 9.15, மு.ப 10.20, மு.ப 11.38, மு.ப 11.58, மதியம் 12.50, பி.ப 2.18, பி.ப 03.04, இரவு 11.58, நள்ளிரவு 12.01
- ✱✱✱ அ) XIV, XIX, XXII, LIV, LVIII, C
  ஆ) LXXVII, CDXXIII, MCCLXXVI, MD, MMMCCXXVI

போட்டி: 02

(A)
a) எடுப்பது பிச்சை; ஏறுவது பல்லக்கு
b) கன்று
c) துரிதம்
d) வைரவிழா
e) ஐம்பூதம்

(B) 4, 5, 1, 8, 7, 2, 9, 3, 6

### மறைந்துள்ள உருவை அடையாளப்படுத்துக

1



### (A) வரைபடங்கள் எந்த நாடுகளுக்குரியன

(சிங்கப்பூர்/சீனா/சுவீடன்/நோர்வே/இந்தியா/பாகிஸ்தான்)

4













### (B) பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்துச் சொல்லைத் தவிர்ந்த சொல்லில் கோடிடுக

| | |
|---|---|
| 1) குழந்தை | - சேய், குளவி, சிசு, மகவு |
| 2) சினம் | - கடுமை, முனிவு, கோபம், சீற்றம் |
| 3) புழுதி | - துகள், தூசி, விபூதி, பொடி |
| 4) யானை | - தும்பிக்கை, தும்பி, கரி, வேழம் |
| 5) பெண் | - காரிகை, கோதை, கோவை, தையல் |

### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 150 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

போட்டி: 01
நூறுல் றஹியா, தரம் - 7D,
மாறை/அறபா தே.பா., வெலிகம.

போட்டி: 02
எம்.எச்.ஃப்.ஷிஹானா, தரம் - 12
கு/பறகஹதெனிய தே.பா., பறகஹதெனிய.

போட்டி: 03
ரி.துவாரஹா, தரம் - 4,
தெளிவத்தை இல.1 த.வித்., பதுளை.

போட்டி: 04
எ.எம்.இஸ்லத், தரம் - 7A,
அல்-நஸார் மு.ம.வித்., கொழும்பு-14.

போட்டி: 05 (குறு.போ-161)
கிறிஸ்டோபர் பஞ்சாட்சணம், தரம் - 7B,
புனித குசையப்பர் கல்., திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மலையக ஆக்கிரமிப்பு

எழுதுபவர்: திலகன்
சித்திரம் : அபயன்

**1.** கி.பி 1615 இல் போர்த்துக்கேய பிரதான தளபதி மலையகத்தை ஆக்கிரமிக்கச் சென்றான். நான்கு திசைகளிலும் இருந்த 'லஸ்கிரிஞ்ஞ' சேனையை ஒன்றிணைத்துக் கொண்டே அவனின் படையெடுப்பு நிகழ்ந்தது. அவர்கள் பலன கடவத்த வழியாக மலையகத்திற்குச் சென்றனர். கம்பளையை நெருங்கினர். அங்கு கண்டி மன்னனின் சேனைகள் வழியில் அவர்களுக்கு இடையூறு செய்ய முயற்சித்தன.

**2.** இத்தளபதியோ படையெடுப்பை தவறான முறையிலேயே ஆரம்பித்திருந்தான். இயற்கையால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைப் பற்றி அவன் சிந்திக்கவில்லை. சுருங்கக் கூறின் அவனுக்கு இந்நாட்டைப் பற்றிய எவ்வித அறிவும் இருக்கவில்லை. அதன் காரணமாக பல துயரங்களை அனுபவிக்க வேண்டி ஏற்பட்டது. அதிக மழை காரணமாக ஆறுகள் பெருக்கெடுத்து ஓடின. அட்டைகளால் மிகுந்த தொல்லைகளை அனுபவித்தனர்.

**3.** எனினும், தளபதி மஸ்கரஞ்ஞாஸ் ஹோமெம் பின் வாங்கவில்லை. மிதக்கும் பாலமொன்றைச் செய்வித்தான். அதன் உதவியுடன் ஆற்றைக் கடந்தனர். மத்துரட்டைக்கும் பதுளைக்கும் சென்றனர். அங்குள்ள கிராமங்களுக்கெல்லாம் தீ வைத்தனர். சொத்துக்களைச் சூறையாடும்படி தனது படை அணிக்கு கட்டளையிட்டான். அவர்கள் அதனை தளபதியின் எதிர்பார்ப்பை விட மிக மோசமாகச் செய்து முடித்தனர்.

**4.** இறுதியில் நகரை எரித்தார்கள். பின்னர் அவர்கள் சப்ரகமுவ வழியாக மல்வானைக்கு வந்தனர். இதற்கிடையில் மன்னன் செனரத் ஒல்லாந்தரின் உதவியை நாடினான். ஆனால், அது நிறைவேறவில்லை. பொக்குவரிடம் வழங்கிய வாக்குறுதியை நினைவுபடுத்தினர். அதனை நிறைவேற்றும்படி நிர்ப்பந்தித்தனர். அவர்கள் உதவி பெறும்பொருட்டு இந்தியாவுக்குச் சென்றனர்.

**5.** வர்த்தக சங்க அதிகாரிகளைச் சந்தித்தனர். மலையக மன்னனுக்கு உதவி வழங்கும்படி பொக்குவர் கேட்டார். தனது உதவி அட்மிரல் ஒருவரைக் கொலை செய்த மன்னனுக்கு உதவி அளிக்க முடியாது என அந்த அதிகாரிகள் கூறினர். இதனால், பொக்குவர், மனந்தளரவில்லை. அங்கிருந்து டென்மார்க் நாட்டுக்குச் சென்றார்.

**6.** இதற்கிடையில் பிரதம தளபதி ஹோமெம் பழிவாங்கத் திட்டமிட்டான். செனரத் மன்னனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்ட 'லஸ்கிரிஞ்ஞா' சேனையைத்தான் பழிவாங்கும் எண்ணம் வந்தது. இந்தப் பிரதம தளபதி படை அணியுடன் துன்பனேக்குச் சென்றான். அவர்கள் 'லஸ்கிரிஞ்ஞா' சேனை மீது தாக்குதல் தொடுத்தனர். மிகக் கொடிய முறையில் அவர்களைக் கொன்றனர்.





**7.** வெற்றிபெற்ற ஹோமெமின் படை நானூறு பற்று, ஹல்லொலுவ பக்கமாக மல்வானைக்கு வந்தன. இதனால், பதவி உயர்வு பெற்ற ஏழு கோறளையின் திசாவையாகிய பிலிப் டி ஒலிவேரியா படையுடன் மலையகத்திற்குச் சென்றான். ஊர் மனைகளை இரண்டாக்கினான். மனிதர்களை மாத்திரமல்ல மிருகங்களையும் கொன்றொழித்தான். மாடுகளையும் இறைச்சிக்காக பிடித்துக் கொண்டு சென்றார்கள்.

**8.** முன்னாள் பிரதம தளபதியான அசவேது கையாண்ட யுத்த முறைகளையே இந்தப் பிரதம தளபதியான ஹோமெமும் கையாண்டான்.

## விதிமுறை எல்லோருக்கும் ஒன்று

மொஸ்கோ நகரில் 'கிரெம்ளின்' மாளிகையில் முடிதிருத்தும் நிலையம் ஒன்று இருந்தது. அங்கு தொழிலாளர்கள், அரசியல்வாதிகள், விவசாயிகள், உயர் பதவிகளில் உள்ளோர் என உயர்வு தாழ்வு பாராது யார் வேண்டுமானாலும் முடிவெட்டிக் கொள்ளலாம். ஒருமுறை இந்த முடி திருத்தும் நிலையத்தில் முடிதிருத்துவதற்காக ஆறு பேர் வரிசையாக அமர்ந்திருந்தனர்.

ஏழாவது ஆளாக லெனின் சென்றார். எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர். பதிலுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு வரிசையில் உட்கார்ந்து நாளிதழ் ஒன்றினைப் புரட்டிக் கொண்டிருந்தார் லெனின். சிறிது நேரத்தில் முடிதிருத்தம் செய்யப்பட்ட ஒருவர் மாளிகை



யிலிருந்து வெளியே சென்றார். உடனே வரிசையிலிருந்த ஆறு பேரும், "ஐயா நீங்கள் உள்ளே போய் முடிதிருத்தம் செய்து கொள்ளுங்கள்" என்று ஏகோபித்துக் கூறினார்கள்.

அதற்கு உடன்படாத லெனின் ஆறு பேரையும் பார்த்து சில கருத்துக்களைச் சொல்லத் தொடங்கினார். "நீங்கள் ஆறு பேரும் வரிசையில் காத்திருக்கையில் இப்போது வந்த நான் மட்டும் முன்னே சென்று முடி திருத்தம் செய்து கொள்வதென்பது விதிமுறையை மீறியதற்கு ஒப்பாகும்.


அரசனாகயிருந்தாலும் ஆண்டியாகயிருந்தாலும் சட்ட விதிமுறைகள் ஒன்றுதான். அதிபராயிருந்தாலும் சாதாரண தொழிலாளியாக இருந்தாலும் வரிசையையும் ஒழுங்கையும் கடைப்பிடித்துத்தான் ஆகவேண்டும். விதியைத் தளர்த்தினால் நாட்டில் ஒழுங்கு கெட்டுவிடும். வரிசை என்பது எல்லோருக்கும் பொதுவானது. உயர் பதவிகளில் இருப்போருக்கு விதிகளைத் தளர்த்தக்கூடாது" என்று கூறித் தானும் வரிசை முறையில் வந்த லெனின் தன் முறை வரும்வரை காத்திருந்து முடிதிருத்தம் செய்து கொண்டு சென்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA SPECIAL COLLECTION

# ஓவியக் கலையின் அழியா நாமம் 'பிக்காஸோ'









தன்னைத்தானே பிக்காஸோ வரைந்த ஓவியம்





ஓவியத்துறையில் அழியா நாமத்தைக் கொண்டவர்தான் 'பெபிலோ பிக்காஸோ' ஓவியக்கலையில் புதிய பரிமாணத்தையும், பரிணாமத்தையும் உலகிற்கு இவர் அறிமுகப்படுத்தினார் என்றால் அதில் மிகையில்லை. இதனால், ஓவியத்துறையில் புதிய பாதையொன்றை ஏற்படுத்திய கௌரவத்தை இவர் பெறுகின்றார். கி.பி 1881 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் பிறந்த பிக்காஸோவின் ஓவிய காலப்பருவத்தினை நீல யுகம், றோஸ் யுகம், நீக்ரோ யுகம் என்று பிரித்துப் பார்க்க முடியும் என்று வர்ணனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தனை பெருமை வாய்ந்த ஓவிய நிபுணர் பிக்காஸோவின் புகழ் அழியாப் புகழ் மிக்கது என்றால் அதில் மிகையில்லை. அத்தகைய புகழ் வாய்ந்தவரின் ஓவியங்கள் சில இங்கு 'விஜய்' வாசகர்களுக்காக வழங்கப்படுகின்றது.

பிக்காஸோவினால் வரையப்பட்ட மேலும் சில ஓவியங்கள்




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 23, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org